வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 13.11.2021 சனிக்கிழமை | இதழ் : 343 | பக்கங்கள் : 16




# வரவு - செலவு திட்டம் - 2022



# பசுமை திட்டங்களுக்கு அதிகளவு முன்னுரிமை

- ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு
- மீன்பிடி, பதனிடல் வலயமாக யாழ்ப்பாணம்
- ஆடைக் கைத்தொழில் வலயமாகிறது கிளிநொச்சி
- இரசாயன பொருள் வலயமாக பரந்தன், புல்மோட்டை

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 15

## சிகரெட் விலை உயர்வு

கொழும்பு, நவ 13

சிகரெட் விலையை உடனடியாக 5 ரூபாவால் அதிகரிக்க யோசனை முன்வைக்கப் பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்மூலம் 8 பில்லியன் ரூபா மேலதிக வருமானம் எதிர்ப்பார்க்கப் படுதாக அமைச்சர் கூறினார்

கடந்த 3 வருடங்களுக்கு பின்னர் சிகரெட் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு

### ரூ 300 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, நவ 13

காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு மேலதிகமாக 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பல்வேறு காலப்பகுதியில், பல்வேறு காரணங்களால் காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட் 15

## கொரோனாவால் மேலும் 23 பேர் பலி!

கொழும்பு, நவ 13

இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 15



## மக்களுக்கு சலுகைகள் இல்லை; ஐ.தே.க. கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு. நவ. 13

வரவு - செலவுத் திட்டத்தில் பொது மக்களுக்கு எவ்வித சலுகையும் வழங்கப்பட வில்லையென பதை வெளிப்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி நேற்று மாலை 15

## அந்தமான் அருகே புதிய தாழமுக்கம்

## கடற்பிராந்தியங்களில் அதிக வேகத்தில் காற்று!

கொழும்பு, நவ 13

தெற்கு அந்தமான் கடற்பரப்புக்கு அருகில் இன்று தாழமுக்கப் பிரதேசம் ஒன்று உருவாகுவதனால் நாட்டைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் காற்று அதிகரித்த வேகத்தில் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறி 15

## நிவாரணமற்ற பட்ஜெட்

### ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ 13

“நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டத்தில், தாங்க முடியாத அளவுக்கு நாட்டிலிருக்கும் வாழ்க்கைச் செலவை குறைக்க எந்த ஏற்படுகளும் இல்லை. வெறும் அரசியலுக்காகவே இந்த வரவு-செலவுத் திட்டம்.”

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ 15

## பஸிலின் பட்ஜெட் உரை பாட்டி வடை சுட்ட கதை

### வடிவேல் சுரேஷ் சீற்றம்

கொழும்பு, நவ 13

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வரவு- செலவுத் திட்ட உரையை, ‘பாட்டி வடை சுட்ட கதை’யென விமர்சித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்.

இது தொடர்பில் அவர் மேலும் 15

## அரச துறைகளில் செலவீனங்களை குறைக்க பட்ஜெட்டில் முன்மொழிவு

கொழும்பு, நவ 13

அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை மாதாந்தம் 05 லீற்றர் குறைக்கப்படும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

2022ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்றத்தில் முன்வைத்து உரையை ஆரம்பித்தார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 15

## அலாவுதீனின் அற்புத விளக்கு எங்கே? பட்ஜெட்டை விமர்சிக்கின்றது எதிரணி!

கொழும்பு, நவ 13

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக விமர்சித்துள்ளது.

உறுதியான திட்டங்கள் அற்ற, வெற்று ஆவணமே இந்த பட்ஜெட் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

அத்துடன், பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான, பொருளாதார 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# வடக்கில் குற்ற செயல்களை தடுக்க சமூக பொலிஸ் பிரிவு நிறுவப்படும்!

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

வடக்கு மாகாணத்தில் அதிகரிக்கும் குற்றச் செயல்களை தடுக்கும்விதமாக சமூக காவல் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா அறிவித்துள்ளார்.

இது குறித்து ஆளுநரின் பத்திரிகை செயலாளர் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் பிரஜா காவல் துறையினர் என்ற பெயரில் செயல்படவுள்ள இந்தத் திட்டத்தில் வேலையற்ற இளைஞர்கள் திறமை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்தத் திட்டம் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் பூரண மேற்பார்வையின் கீழ், வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜெகத் பலிஹக்காரவின் பணிப்புரையின் பேரில் செயல்படுத்தப் படுகின்றது.

இந்த அணிகளை தெரிவு செய்யுமாறு யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதேச உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழில் சீரற்ற காலநிலை காரணமாக 10 ஆயிரத்து 320 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுவரை 10 ஆயிரத்து 320 குடும்பங்களை சேர்ந்த 34 ஆயிரத்து 219 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்து பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் ஒரு வீடு முழுமையாகவும், 112 வீடுகள் பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளன என ரி.என். சூரியராஜா மேலும் கூறினார்.

அத்தோடு தற்போது 4 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 47 குடும்பங்களை சேர்ந்த 164 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3)

# சுகாதார அமைச்சரின் பரிந்துரையை நிராகரித்தார் ஜனாதிபதி கோட்டாபய!

கொழும்பு, நவ 13

மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்குச் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் மஹரகம அபெக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் விஜித் குணசேகரவின் பெயரைப் பரிந்துரை செய்திருந்த போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதனை நிராகரித்துள்ளார் என அறியமுடிகின்றது.

அதன்பின்னர் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்கு வைத்தியர் சவீன் சேமகேவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

வைத்தியர் சேமகே இராணுவ வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் என்பதுடன் அவர் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பாகவும் செயற்பட்டுள்ளார்.

# அரச சேவையில் ஓய்வுபெறும் வயதெல்லை 65ஆக உயர்வு!



கொழும்பு, நவ. 13

அரச சேவையில் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 வயது வரை நீடிப்பதாகவும், இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் நெருக்கடி ஏற்படாது எனவும் வரவு - செலவு திட்ட உரையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், அரச அதிகாரிகளுக்கு வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை மாதத்திற்கு ஐந்து லீற்றரால் குறைக்கவும், தொலைபேசி கொடுப்பனவுகளை 25 வீதத்தால் குறைக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் 76 ஆவது வரவுசெலவுத்திட்டத்தையும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இரண்டாவது வரவு - செலவு திட்டத்தையும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றில் நாடு பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும், அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் பூகோள சவால்கள் என சகல விதத்திலும் நாம் சவால்களை எதிர்கொண்டு வருகின்றோம், 500 பில்லியனுக்கும் அதிகமான ரூபாய் வருமானம் இழந்த நாடாக உள்ளோம். மிகப் பெரிய சவால்களை எதிர்கொள்ளும் நாடாக மாற்றம் கொண்டுள்ளோம். எனினும், சகல சவால்களையும் வெற்றி கொள்ளும் திறம் எம்மிடத்தில் உள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கப்படும், இந்த நாட்டில் அடிப்படைவாதம், பயங்கரவாதத்திற்கு இனியும் இடமில்லை. கோவிட் சவால்களை வெற்றி கொள்ளவும், மக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த நாட்டை நீண்ட காலம் முடக்க நேர்ந்தது. மூன்றாம் அலையை தடுக்க கடுமையான தீர்மானங்கள் எடுக்க நேர்ந்தது - என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# கத்தி வெட்டில் இளைஞர் காயம்!



வடமராட்சி, நவ. 13

கத்தியால் வெட்டப்பட்ட சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளார்.

கரணவாய் மேற்கு - அந்திரான் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த தே. பாலகுமார் (வயது 23) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை தலைக்கவசம் மூலம் முகத்தை மூடியவாறு அவரின் வீட்டுக்குள் நுழைந்த மூவர் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி சென்றனர். இந்நிலையில் நேற்று அதிகாலை மீண்டும் அவரின் வீட்டுக்கு சென்றவர்கள் கதவை உடைத்து நுழைந்து அவரை கத்தியால் குத்தியும் வெட்டியும் காயப் படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ஐ-02)

## வடமாகாண மரநடுகை மாதம் 13 கார்த்திகை 2021

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்"

- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

### கல்வி tv CHANNEL-1 — 13.11.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2 — 13.11.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
13.11.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அவ்வாறாயின் தாக்குதலாளிகள் யார்?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்ந்தும் மர்மங்கள் நிறைந்த ஒன்றாகவே இருக்கின்றது. அரசியல்வாதிகள் அவ்வப்போது வெளிப்படுத்திவரும் கருத்துக்கள் ஒவ்வொன்றும் முன்னுக்கு பின் முரணாக இருக்கின்றன. இந்தப் பின்னிணியில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் எவரும் ஐ. எஸ். ஐ. எஸ். எனப்படும் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பில் பயிற்சிபெற்றவர்கள் அல்லர் – என, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். இலங்கையின் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான கத்தோலிக்க பீடம், குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு தொடர்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையிலேயே, ரணில் இவ்வாறானதோர் கருத்தை வெளியிட்டிருக்கின்றார். இந்தக் கூற்றானது, குற்றவாளிகளை உள்ளுக்குள் தேட வேண்டுமென்னும், ஒரு மறைமுக அபிப்பிராயத்தையும் ஊக்குவிக்கின்றது.

தாக்குதல் இடம்பெற்ற முறையும் – தாக்குதலுக்கு முன்னர் அவர்கள் தங்களை அடையாளம் காட்டியிருக்கும் விதமும், அவர்கள் ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பை பின்பற்றுபவர்கள் என்பதையே நிரூபிக்கின்றது. தாக்குதல் இடம்பெற்ற பின்னர் ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு உரிமை கோரியிருப்பதான செய்திகளும் வெளியாகியிருந்தன. இந்தநிலையில், தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவர்கள் அல்லர் என்றால் அவர்கள் எந்த அடிப்படையில் இயங்கினர்? அவர்களை இயக்கியவர்கள் யார்? சர்வதேச வலையமைப்பு ஒன்றுடன் தொடர்பு இல்லாவிட்டால் எவ்வாறு அவர்களால் தற்கொலை தாக்குதலை மேற்கொண்டிருக்க முடியும்? அவர்கள் ஏன் அமெரிக்கர்களை – மேற்குலகத்தை சேர்ந்தவர்களை இலக்கு வைத்தனர்? சிங்களவர்களை இலக்கு வைக்கும் நோக்கோடு அவர்கள் இந்தத் தாக்குதலைத் திட்டமிடவில்லை. முற்றிலும் மேற்குலக எதிர்ப்பை அடையாளப்படுத்தும் நோக்கிலேயே, தங்களின் தாக்குதல் இலக்குகளை தெரிவு செய்திருக்கின்றனர். கிழக்கில் சியோன் தேவாலயத்தை அவர்கள் இலக்கு வைத்திருந்தனர். இஸ்ரேலிய எதிர்ப்பை காண்பிக்கும் ஒரு செய்தியாகவே இதனை நோக்கவேண்டும்.

தாக்குதலுக்கு பின்னால் ஒரு தெளிவான அரசியல் தெரிகின்றது. இவ்வாறானதோர் அரசியல் பின்புலத்துடன் தாக்குதலை மேற்கொண்டவர்கள் வெளிநாட்டு தொடர்புகள் இல்லாமல் இருந்திருப்பார்களா? அதற்கு வாய்ப்பிருப்பின் உள்நாட்டில் அவர்களுக்கு பலமான இஸ்லாமிய பின்னணி இருந்திருக்க வேண்டும். ஏனெனில், தற்கொலை தாக்குதல்களை ஒருவர் வெறும் தன்னெழுச்சியின் அடிப்படையில் மேற்கொள்ள முடியாது. அப்படிவேறு இடங்களில் நடந்ததாக சான்றுகளும் இல்லை.

ஈஸ்டர் தாக்குதலின் மூலம் இலங்கை வேறொரு பரிமாணத்திற்குள் சென்றுவிட்டது. அதுவரையில் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாடு என்னும் அடிப்படையிலேயே இலங்கை சர்வதேச அரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்டது. ஆனால், ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் இலங்கையின் சர்வதேச பரிமாணம் மாறிவிட்டது. இஸ்லாமிய பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்ட நாடு என்னும் புதிய அடையாளமும் இப்போது இலங்கைக்கு இருக்கின்றது. உள்நாட்டைப் பொறுத்தவரையில், ஈஸ்டர் தாக்குதல் அதிகம் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. கர்தினால் மல்கம் ரஞ்சித் சுயாதீன விசாரணையொன்றை கோரி வருகின்ற நிலையில், ஈஸ்டர் தாக்குதல், தெற்கின் தேர்தல் அரசியலில் தொடர்ந்தும் செல்வாக்குச் செலுத்தக் கூடியதொரு காரணியாகவும் இருக்கின்றது.

ஆனால், இது அடிப்படையில் ஓர் உள்ளூர் அரசியல் பிரச்னையில்லை. இதனை வெறுமனே, உள்ளூர் அரசியலாக்கினால் – ஒரு வேளை இதன் உண்மையான பின்னணிகளை ஆராய முடியாமல் போய்விடலாம். ஆனால், ஈஸ்டர் தாக்குதல் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு முக்கிய பேசுபொருளாக மாறலாம். இது மேலும், பல சர்ச்சைகளை தோற்றுவிக்கலாம்.

# இந்தியாவின் நலன் கருதியதே 13ஆவது திருத்தச்சட்டம் !

**- அலசுவது இராஜதந்திரி -**

*இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேயை ஆர். சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்திருந்தனர். அப்போது எப்போதும் போலவே வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காண இந்தியா உதவ வேண்டும் என்ற பழைய பல்லவியை ஆர். சம்பந்தன் ஐயாவும் அவர் சார்ந்தோரும் இந்திய உயர் ஸ்தானிகரிடம் கோரியிருந்தனர்.*

*1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது. இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 34 வருடங்களாகி விட்டன. இந்த மூன்று தசாப்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பமான காலம் முதல் இலங்கையின் தமிழ் தரப்பு 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்துக்கு இந்தியத் தரப்பிடம் கெஞ்சி மன்றாடி வருகின்றதே தவிர, இந்தியா எவ்விதத்திலும் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து கவனத்தில் கொள்வதாக இல்லை.*

*இந்திய இராஜதந்திரிகள் மட்டத்தில் மட்டுமல்ல. இந்தியாவில் பதவிக்கு வரும் அரச தரப்பினர் மற்றும் அரசியல் பிரமுகர்களிடமும் வடக்கு - கிழக்கு அரசியல் தரப்பு 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்துக்கு இலங்கை அரச தரப்பினர் மீது அழுத்தங்களை பிரயோகிக்குமாறு இடையறாது கோரி வருகின்றனர்.*

*ஆனால், 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து நன்கு ஆராயும் பட்சத்தில், இந்தியா தனது பிராந்திய நலன்களைப் பேணும் விதத்தில் இலங்கையின்மீது தனது கவனத்தை வைத்திருக்கும் வகையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை கையாள்கின்றதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.*

*இலங்கையின்மீது இந்தியாவின் பார்வை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. ஏனெனில், சீனா இலங்கையில் கால்பதித்துள்ள நிலையில் அரசியல் ரீதியாக இந்தியாவுக்கு இலங்கையில் ஒரு பிடி இருக்க வேண்டியது அவசியமானதாகின்றது. எனவே, இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னையின் முக்கிய அம்சமாக இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கத்தில் இந்தியாவின் பங்களிப்பும் இருப்பதன் காரணமாக, இந்தியா வடக்கு - கிழக்கு தமிழர்களின் நலன்களை 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தீர்க்க முன்வருவதைவிடுத்து தனது நலனையே முதன்மைப்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.*

*13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குமாறு தம்மை இடையறாது இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழ்த் தரப்பு வலியுறுத்தும் என்பதை இந்தியா நன்கறிந்து வைத்துள்ளது. இதன் மூலம் இலங்கைக்கு தமக்கு வேண்டிய*



*சந்தர்ப்பங்களிலெல்லாம் அழுத்தங்களை பிரயோகிக்க 13ஆவது திருத்தச்சட்டத்தை இந்தியா ஒரு நல்ல காரணியாக வைத்துள்ளதையே அறிய முடிகின்றது.*

*இந்திய இராஜதந்திரிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் இலங்கை வரும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்திப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அப்போதெல்லாம் இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினர் முக்கியமாக எடுத்துக் கொள்ளும் விடயம் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கமாகவே இருக்கின்றது.*

*இருந்தபோதிலும், இந்திய தரப்பினர் வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பினரின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து எவ்வளவு தூரம் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்கும்படி இலங்கை அரச தரப்புக்கு அழுத்தங்களை கொடுக்க முன்வருகின்றனர் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.*

*இதுகுறித்து வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பும் நன்கறிந்து வைத்துள்ளதென்றே அறிய முடியும். ஆயினும், இந்தியாவின் தயவைக் கோருவதைவிட வேறு வழியில்லை என்ற நிலையில் வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பை இராஜதந்திர நகர்வுகள் மூலம் இந்தியா தன்வசப்படுத்தியுள்ளது.*

*ஒருபுறம் 13ஆவது திருத்தச் சட்டம் மூலம் வடக்கு - கிழக்கு தமிழ்த் தரப்பை தம்மை நாட வைத்துள்ள அதேசமயம், மறுபுறத்தே இலங்கையினுள் தனது மூக்கை நுழைப்பதற்கான காரணிகளில் ஒன்றாக 13ஆவது திருத்தச் சட்டதை இந்தியா கையாள்வதையே அவதானிக்க முடிகின்றது.*

*இந்நிலையில் நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவரும் அவரது சகாக்களும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயுடன் நடத்திய சந்திப்பு கூட 13ஆவது திருத்தச்சட்டம் குறித்த தொடர்கதையின் ஒரு பாகமாக இருந்தது.*

*மற்றொரு கோணத்தில் பார்க்கும்போது வடக்கு - கிழக்கின் தமிழ் தரப்புக்குக்கூட தமது அரசியலை நகர்த்திச் செல்வதற்கு 13ஆவது திருத்தச்சட்டமும் அது குறித்து இந்தியாவிடம் வலியுறுத்துவதும் முக்கிய காரணிகளாக இருப்பதையே அறியமுடிகின்றது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



நவம்பர் - 13 சனிக்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி - 27
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : தசமி




**மேடம்**
காத்திருந்த நல்ல விஷயம் ஒன்று இன்றைக்கு நடைபெறும். தவறு செய்பவர்களை தட்டிக்கேட்டு உணரச் செய்வீர்கள். நல்லுறவு ஏற்படுத்தும் முயற்சி ஒன்றில் சிறந்த பலன்கள் ஏற்படும்.

**இடபம்**
உற்சாகத்துடன் செயல்பட்டு தள்ளிப்போட்ட பணிகளை முடிப்பீர்கள். போட்டிகளை சமாளிப்பீர்கள். பணியிடத்தில் பகை ஒன்று தீரும். போராடி வெல்வீர்கள். முயற்சி தாமதமானாலும் முடிவு சுபம்.

**மிதுனம்**
சிக்கல்கள் வராமல் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். குடும்பத்தினரை அனுசரித்து சென்று அமைதி காண்பீர்கள். அவசரப்பட்டு அதிக முதலீடுகளை இன்று செய்ய வேண்டாம்.

**கடகம்**
சில விஷயங்களில் திட்டமிட்டதற்கு மாறாக நடக்கக்கூடும். வேண்டாத சிலரின் செயல்பாடுகளால் அமைதி குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கவலை தீரும்.

**சிம்மம்**
நேற்றைய வருத்தங்கள் தீரும். பெண்கள் மூலம் விருப்பம் கைகூடும். வியாபாரத்திலும், பணியிடத்திலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். எந்த விஷயம் பற்றியும் பயப்பட வேண்டாம்.

**கன்னி**
புதிய பொருட்கள் வாங்க வாய்ப்புகள் வரும். கவலைகள் குறையும். உங்களின் முயற்சிகள் கைகூடும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும் எதிர் பாலினத்தினர் உதவி செய்வர்.

**துலாம்**
இன்றைய நிகழ்வுகள் மன மகிழ்ச்சி தரும். நேர்மையான உழைப்பால் உயர் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். கவர்ச்சி அம்சம் அதிகரிப்பதால் உங்களின் செல்வாக்கு கூடும்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர்கள். தைரியம் கூடும். சுபநிகழ்ச்சி பற்றிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். நவீன ரக வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**தனுசு**
பணி பற்றிய விஷயம் உறுதியாகும். சற்றும் எதிர்பாராத நபர்களிடம் இருந்து உதவி கிடைக்கும். பணியிடத்தில் இருந்து வந்த சிரமங்களும், சிக்கலும் குறையும்.

**மகரம்**
அதிக வட்டி கடனை ஒரு வழியாக அடைத்து நிம்மதி அடைவீர்கள். நெருங்கிய நண்பர்களின் இயல்பை புரிந்து கொள்வீர்கள். இதமாகப் பேசி பிரிந்திருந்த குடும்பங்களை இணைப்பீர்கள்.

**கும்பம்**
பிள்ளைகளுக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். உங்களுக்கு எதிராக பேசிய உறவினர் தவறை உணர்வார்கள்.

**மீனம்**
குடும்பத்தில் ஒருவருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். குழந்தைகள் உங்களுக்கு ஒத்துழைப்பர். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணியிடத்தில் உங்கள் கை ஓங்கும்.

# மழை, வெள்ளம் நிவாரணத்துக்காக ஆயிரம் கோடி ரூபாய் அவசர தேவை

## தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்கவேண்டும் என்கிறார் ராமதாஸ்



சென்னை, நவ. 13,

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மழை வெள்ள பாதிப்புக்களை ஈடுசெய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் மத்திய அரசு முதல் கட்டமாக ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை வைத்திருக்கிறார்.

நிவாரணப் பணிகளையும், உதவிகளையும் செய்து முடிப்பதற்கு குறைந்தபட்சம் சில ஆயிரம் கோடி ரூபாயாவது தேவைப்படும். ஆனால், மழை தொடர்ந்து கொண்டிருக்கும் சூழலில் புயல் மற்றும் மழை பாதிப்புகளை உடனடியாக மதிப்பிடுவது சாத்தியமே இல்லை. பாதிப்பு மற்றும் சேத மதிப்பை கணக்கிட்டு, மத்திய அரசிடம் நிதியுதவி கோருவதற்கு இன்னும் சில வாரங்கள் ஆகக்கூடும்.

ஆனால், அதுவரை மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு தேவையான நிதி தமிழக அரசிடம் இல்லை என்று நேற்று வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ராமதாஸ்,

“பேரிடர் மேலாண்மைக்காக, தமிழக அரசுக்கு, ரூ.1,360 கோடியை மட்டுமே பதினைந்தாவது நிதிக்குழு பரிந்துரைத்திருக்கிறது.

ஆனால், கொரோனா நோய்த் தடுப்பு - சிகிச்சை உள்ளிட்ட செலவுகளுக்காக கடந்த ஜூலை மாதம் வரை மட்டுமே ரூ.8,931 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் மாநில அரசின் சுமை மற்றும் பொறுப்புகளை மத்திய அரசும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, புயல் மற்றும் மழை நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழக அரசுக்கு மத்திய அரசு முதற்கட்டமாக குறைந்தபட்சம் ரூ.1000 கோடி நிதி வழங்க வேண்டும். மழை ஓய்ந்த பின்னர் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மதிப்பிடுவதற்காக அதிகாரிகள் குழுவை மத்திய அரசு அனுப்பி வைக்க வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்

# கேரளவிடம் தமிழக உரிமைகளை தி.மு.க. அரசு தாரைவார்த்துள்ளது!

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை தி. மு. க. அரசு தாரைவார்த்துள்ளதாக அ. தி. மு. க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ஓமலூரில் உள்ள அ.தி.மு.க. மாவட்ட அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நகர்ப்புற ஊரக உள்ளாட்சி தேர்தல் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், மேட்டூர் அணை உபரி நீரை சேலத்திலுள்ள 100 ஏரிகளில் விடுவது தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இங்கு பேசிய எடப்பாடி பழனிசாமி பொதுத்தேர்தலில் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளித்து பின்புற வாசல் வழியாக பதவியேற்றுள்ளது தி. மு. க. அரசு என்றார். இதுவரை இல் லாத நடைமுறையாக கேரளா அமைச்சர்களின் மேற்பார்வையில் முல்லை பெரியாறு அணையில் இருந்து உபரி நீர் திறப்பது, தமிழ்நாட்டின் உரிமையை தாரை வார்க்கும் செயல் என குற்றம் சாட்டினார்.

மேலும் மேட்டூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீரை சரபங்கா வடிநிலத்தில் உள்ள 100 ஏரிகளுக்கு நீர் ஏற்று பாசனம் மூலம் தண்ணீரை திறந்து விடவேண்டும் என கூறினார். இதையடுத்து நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற வாக்களிப்பு நிலையங்கள் வாரியாக வாக்குகளை சேகரிப்பது குறித்து கட்சி நிர்வாகி களிடம் ஆலோசனை நடத்தினர்.

# முல்லைப்பெரியாறு அணை விவகாரம் கூடலூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



கூடலூர், நவ. 13,

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கூடலூரில் அனைத்து விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர் கேரள எல்லையான குமுளியை நோக்கி நடைபயணம் சென்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரள மாநில அரசை கண்டித்து தேனி மாவட்டம் கூடலூர் புதிய பஸ் நிலையம் அருகே தமிழக அனைத்து விவசாய சங்கங்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதற்கு தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பி. ஆர்.பாண்டியன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு, புதுச்சேரி வக்கீல்கள் சங்க கூட்டமைப்பு மாநில துணைத்தலைவர் எம்.கே.எம்.முத்துராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த வேண்டும், பேபி அணையை பலப்படுத்தும் பணியை தொடங்க வேண்டும் என்றும், கேரள அரசை கண்டித்தும் விவசாயிகள் கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் அவர்கள் தமிழக - கேரள எல்லையான குமுளியை நோக்கி நடைபயணமாக செல்ல முயன்றனர். இதனால் பரபரப்பு உண்டானது. அப்போது அவர்களை தேனி மாவட்ட பொலிஸார் தடுத்து நிறுத்தினர். மேலும், தடுப்புகள் அமைக்கப்பட்டு பொலிஸார் குவிக்கப்பட்டனர். விவசாயிகளை செல்ல விடாததால் அவர்கள் அங்கேயே போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

# உள்ளூர் மீனவரின் கோரிக்கைகளை புறந்தள்ளி தெற்கு வாசிக்கு கடல்அட்டை பண்ணை அனுமதி!

## புங்குடுதீவு மீனவக் குடும்பங்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 13

**புங்குடுதீவில் உள்ளூர் மீனவர்களின் கோரிக்கைகளை புறந்தள்ளி தென்னிலங்கையை சேர்ந்தவருக்கு கடல் அட்டை பண்ணை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**இதனை தடுத்து நிறுத்தவேண்டும் என வேலணைப் பிரதேசசபை எதிரணி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் கடற்தொழில் அமைச்சினால் தென்னிலங்கையைச் சேர்ந்த நபருக்கு 30 ஏக்கரில் கடலட்டை பண்ணை அமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள சிறீமுருகன் கடற்தொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்களை ஏமாற்றியே இந்தச் செயல்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன் பின்னணியில் வேலணை பிரதேச சபை உறுப்பினரொருவர் இருப்பதாகவும் அப்பகுதி மீனவர்கள் கூறுகின்றனர்.

மேற்படி கடலட்டை பண்ணை அமைக்கப்படுமானால் இப்பகுதியிலுள்ள கடல் வளங்கள் முழுமையாக அழிக்கப்படலாமென்றும் குடும்பத்தோடு தற்கொலை செய்வதனை தவிர வேறு வழியில்லையென்றும் அப்பகுதி மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வேலணை பிரதேச சபையினரின் எந்தவித அனுமதியுமின்றி நடைபெறும் இச்செயற்பாடு குறித்து வேலணை பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான கருணாகரன் நாவலன், செல்லப்பா பார்த்தீபன், பிலிப் பிரான்சிஸ், சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதோடு மீனவர்களின் கருத்துக்களையும் செவிமடுத்திருந்தனர்.

உள்ளூர் மீனவர்களை ஏமாற்றி செய்யும் இத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவேண்டும் எனவும், உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் குறித்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த சமூக மட்ட அமைப்புக்கள் முன்வரவேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-03)

# நெடுந்தீவில் அதிகளவு மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 13

நெடுந்தீவில் அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது


கடந்த 24 மணி நேரத்தில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 119.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், நெடுந்தீவு பிரதேச செயலகத் துக்குட்பட்ட பகுதியில் கடும் மழையின் தாக்கத்தினால் 14 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், பாதிக்கப்பட்டோர் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (அ-03)

# வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் 10 பேர் உட்பட 38 பேருக்கு தொற்று

வவுனியா, நவ 13

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 10 பேர் உட்பட 38 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர், தாமாக முன்வந்து பரிசோதனை செய்தோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள் ளப்பட்ட பீசிஆர் மற்றும் அன்டிஜென் பரி



சோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் வெளியாகின.

அதில் வவுனியா மாவட்டத்தின் நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வவுனியா, இராசேந்திரங்குளம் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் 10 பேர் உட்பட 38 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை சிகிச்சைக்காக தனிமைப் படுத்தவும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாட்களாக கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

வடமராட்சி, நவ12

இந்திய மீனவர்கள் 23 பேரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் பொன்னுத்துரை கிருசாந்தன் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 13ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் நீதிமன்றில் சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது இலங்கை எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டை இந்திய மீனவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து அவர்களுக்க தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதாக ட்றோலர் படகுகளின் நீளத்தை மன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீரியல் வளத் துறையினருக்கு கட்டளை பிறப்பித்த நீதிவான் வழக்கை திங்கட்கிழமை வரை ஒத்திவைத்தார். (அ-02-03)

# கூட்டெருவை இலவசமாக விநியோகிக்கத் தீர்மானம்!

கொழும்பு, நவ 13

கூட்டெருவை இலவசமாக விநியோகிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டுக்கு அனுமதியை பெறுவதற்காக நேற்று காலை இடம்பெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தின்போது, இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக. அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், நுண்ணிய நைதரசன் எனும் நனோ நைதரசன் திரவ உரத்தை அதிகமாக இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

# பருத்தித்துறை பிரதேச சபையின் பட்ஜெட் 16 வாக்குகளால் வெற்றி

வடமராட்சி, நவ 13

பருத்தித்துறை பிரதேச சபையின் 2022 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 16 வாக்குகளால் நிறைவேறியது.

சபையின் விசேட கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை சபையின் தவிசாளர் அ. சா. அரியகுமார் தலைமையில் நடை பெற்றது.

வரவு - செலவுத் திட்டத்தை வாக்கெடுப்புக்கு விட்டபோது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 8 உபறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுனவின் தலா ஒரு உறுப்பினருமாக 16 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஈ.பி. டி .பி.யின் சார்பில் கலந்துகொண்ட ஒரேயோர் உறுப்பினர் மாத்திரம் எதிராக வாக்களித்தார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட இச் சபையில் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, பொதுஜன பெரமுன, முழுமையான ஆதரவை வழங்கின.

எஞ்சிய ஈ.பி. டி. பி.யின் 2 உறுப்பினர்களும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஓர் உறுப்பினரும், ஐ.தே. க. வின் ஒரே ஓர் உறுப்பினரும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. (அ-02)

## மேல் மாகாணத்தில் விசேட தேடுதல்

# பயணிகள், சாரதிகள் உள்ளிட்ட பல தரப்பினருக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ.13

மேல் மாகாணத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணி வரை விசேட பொலிஸ் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மக்கள் சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றுகின்றார்களா என்பதை கண்டறியவே இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேல் மாகாணத்தில், சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத, 369 பயணிகள் போக்குவரத்து பஸ்களின் சாரதிகள் மற்றும் 67 குளிரூட்டப்பட்ட சொகுசு ரக பஸ்களின் சாரதிகளுக்கும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், மேல் மாகாணத்தில் 581 கடைகளின் உரிமையாளர்களுக்கும் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த தேடுதல் நடவடிக்கையில் 437 பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர். 998 பயணிகள் பஸ்கள், 207 குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்கள் மற்றும் 1,290 சில்லறை விற்பனை நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் சிறிய கடைகள் ஆகியன பரிசோதனை செய்யப்பட்டன. (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மீனவர்கள் பாதிப்பு!

மன்னார், நவ. 13

தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடல் பகுதியில் வீசி வரும் அதீத காற்று காரணமாக நேற்று மூன்றாவது நாளாக அதிகளவான மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளை தவிர்த்தனர்.

மன்னார் தீவகப் பகுதிகளை சூழ்ந்த கடல் பரப்பின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து காணப்படுகின்றமையாலும் கடல் பகுதியில் அதீத காற்று வீசுவதனாலும் மீன்பிடி நடவடிக்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

அதே நேரம், உள்ளூர் மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு கடற்கரையை அண்மித்த பகுதிகளில் ஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# நாட்டில் வெகுவிரைவில் கொரோனா புதிய அலை!

## இலங்கை மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ 13

**நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த பிரயாணத்தடை நீக்கப்பட்டமையின் காரணமாக மிக விரைவில் மேலுமொரு கொரோனா அலை உருவாகுவதற்கான கடும் எச்சரிக்கை நிலை உருவாகியுள்ளதாக இலங்கை மருத்துவர் சங்கம் அறிவித்துள்ளது.**

அவ்வாறானவொரு நிலை ஏற்படாமல் தவிர்த்துக்கொள்வதற்கான பரிந்துரைகள் உள்ளடங்கிய கடிதம் அந்த சங்கத்தினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் தற்போதைய சட்டம் மற்றும் வரையறைகளைக் கடுமையாக்கவேண்டும் என்றும் அந்தச் சங்கம் பரிந்துரைத்துள்ளது.

அதன்போது சுகாதார நடைமுறைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை முழுமையாகக் கண்காணித்தல் மற்றும் சான்றுப்படுத்தல் கட்டாயமானது என்றும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று முக்கிய தரப்பினருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைச் செலுத்துவது அவசியம் என்றும் கொரோனா தொற்று பரவலடையும் எச்சரிக்கைத் தன்மையை தற்போதைய நிலையில் கவனத்தில் கொள்ள வேண்டிய கட்டாயம் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், மறுவாழ்வாக்கப்படவேண்டிய 60 வயதுக்கு குறைவான நோயாளர்கள் மற்றும் சகல சுகாதார சேவையாளர்களுக்கு மூன்றாம் கட்டமாக பைசர் தடுப்பூசி வழங்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டடங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், மரண சடங்குகள், இசை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையை வரையறுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)



# மண்சரிவு அபாய வலயத்தில் வாழும் 12,000 குடும்பங்கள்!

கொழும்பு, நவ 13

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் 12 ஆயிரம் குடும்பங்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

அபாய வலயத்திற்குள் வசிப்போரை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட புவிச்சரிதவியலாளர் பேராசிரியர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, மொனராகலை, கேகாலை, குருநாகல், கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட மாவட்டங்களிலேயே மண்சரிவு அபாய வலயத்திற்குள் மக்கள் வசிப்பதாக அவர் கூறினார்.

இவ்வாறானவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியது கட்டாயமானது எனவும் சிரேஷ்ட புவிச்சரிதவியலாளர் பேராசிரியர் வசந்த சேனாதீர சுட்டிக்காட்டினார்.

# எம். பிக்களுக்கு கடும் அதிர்ச்சியை கொடுத்த பஸிலின் முன்மொழிவு!

கொழும்பு, நவ. 13

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய கால எல்லை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று இந்த தகவலை வெளியிட்டார்.

இதன்படி தொடர்ச்சியாக 10 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக (2 தடவைகள்) செயல்பட்டிருந்தால் மட்டுமே அந்த உறுப்பினர் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்.

இதுவரை 5 வருடங்கள் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தால் ஓய்வூதியம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி பதவி வகிப்பவருக்கும் இந்த நடைமுறை பொருந்தும் என நிதி அமைச்சர் அறிவித்தார் .

அத்துடன், அரச ஊழியர்களுக்கான எரிபொருள் மானியம் 5 வீதத்தாலும், தொலைபேசிக் கட்டணங்கள் 25 வீதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளன.

# புதிய கோவிட்-19 சட்டங்களினால் மக்களின் ஆதரவை இழக்கநேரிடும்

## சுகாதார பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ .13

கோவிட் -19 தொற்று நோயின்போது பொது ஆதரவின்றி புதிய சட்டங்களை திணிப்பது, கோவிட் தணிப்பு முயற்சிகளில் மக்களின் ஆதரவை அடி மட்டத்தில் இழக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

பொதுக்கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதி தேவை என சுகாதார அமைச்சரினால் வெளியிடப்பட்ட அண்மைய வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹண, அனைத்து எதிர்ப்புக்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் இந்த வர்த்தமானியில் அடங்கும் - என்றார்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.

கொரோனா தொற்றின் ஆபத்தை பொதுமக்கள் உணர வேண்டும். எனவே கடுமையான வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்கவேண்டும். பொதுமக்களை அதிகாரிகளுக்கு எதிராகத் திருப்பும் சட்டங்களால் கட்டுப்படுத்தப்படவேண்டியதில்லை என்பதே உண்மை என வும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சினோபார்ம் தடுப்பூசி பெற்றவர்கள் பிரிட்டனுக்கு செல்வதற்கு அனுமதி!

கொழும்பு, நவ. 13

சினோபார்ம் தடுப்பூசியை போட்டுக் கொண்டவர்கள் பிரிட்டனுக்கு பயணம் செய்ய முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் சினோபார்ம் தடுப்பூசியை முழுமையாக போட்டுக் கொண்ட மக்கள் பயனடையும் வகையில், நவம் பர் 22 திகதி முதல் சினோபார்ம், சினோவக் தடுப்பூசிகள் பிரிட்டனில் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளின் பட்டியலில் சேர்க்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி இந்த தடுப்பூசிகளை போட்டுக் கொண்டவர்கள் பிரிட்டனுக்கு பயணிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நிர்வகிக்கப்படும் முன்னணி தடுப்பூசி சினோபார்ம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னாரில் 11 நாள்களில் 240 தொற்றாளர் அடையாளம்

மன்னார், நவ. 13

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மேலும் 50 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கடந்த 11 நாட்களில் மன்னார் மாவட்டத்தில் 240 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளரென மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை மேலும் புதிதாக 50 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 45 தொற்றாளர்கள் அன்ரிஜென் பரிசோதனைகள் மூலமாகவும் 05 தொற்றாளர்கள் பி.சி.ஆர் பரிசோதனை மூலம் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 09 தொற்றாளர்கள் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலும் தொற்றாளர்கள் 8 தொற்றாளர்கள் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலும் மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் அடம்பன் வைத்தியசாலைகளில் தலா 06 தொற்றாளர்களும், நானாட்டான் வைத்திசாலையில் 05 தொற்றாளர்களும், வங்காலை வைத்தியசாலையில் 04 தொற்றாளர்களும், முருங்கன், பெரிய பண்டிவிரிச்சான், மற்றும் விடத்தல்தீவு ஆகிய வைத்தியசாலைகளில் தலா 02 தொற்றாளர்களும், தலைமன்னார் வைத்தியசாலையில் ஒரு தொற்றாளரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் 11 நாட்களில் 240 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சராசரியாக 21 பேர் நாள் ஒன்றுக்கு மன்னாரில் கோவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் மொத்தம் 2,618 கொரோனா தொற்றாளர்களும், தற்போது வரை 2,635 கொரோனா தொற்றாளர்களும் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த மாதம் மேலும் 02 கொரோனா தொற்றாளர்கள் மரணித்துள்ளனர்.

இது வரை மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 25 கொரோனா தொற்றாளர் மரணங்கள் பதிவாகி உள்ளன.

கொரோனா மரண வீதமானது மன்னார் மாவட்டத்தில் 0.95 ஆக காணப்படுகின்றது.

இதேவேளை, கொரோனா தொற்று அதிகரிப்புக்கு பிரதான காரணமாக மக்கள் அதிகமாக வெளியில் நடமாடுவது, சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது செயல்படுவது மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் குறிப்பிடப்பட்ட ஆளணிகளுக்கு மேலாக இணைந்திருப்பதும் ஒரு காரணமாக இருக்கிறது.

அதேவேளை, நிகழ்வுகளை ஒழுங்கு செய்பவர்கள் சுகாதார அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றே நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டிய நிலை உருவாகியிருக்கின்றது.

அத்தோடு இரண்டு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டவர்கள் மாத்திரமே எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வியாபார நிலையங்கள், சந்தைகள், பொது போக்குவரத்து வாகன சேவைகள் ஆகியவற்றில் நடமாட அனுமதிக்கப்படுவர். அத்துடன் தற்போதுள்ள கால நிலை, மழை வீழ்ச்சி காரணமாக டெங்கு தொற்று நோய் பரவும் அபாயம் மன்னார் மாவட்டத்தில் உருவாகியுள்ளது.

குறிப்பாக வீடுகள் மற்றும் வீடுகள் சூழல் உள்ள இடங்களில் வெள்ள நீர் தேங்கி காணப்படுகிறது. ஆகவே மக்கள் இவ் விடயத்திலும் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர். நுளம்புகள் உற்பத்தியாகும் இடங் களை இனம் கண்டு உடன் அவற்றை இல்லாது ஒழித்து நுளம்பு தாக்கத்திலி ருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 89 சதவீதமானோர் முதலாவது தடுப்பூசிகளையும் 71.9 சதவீதமானோர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்.

இதனைத் தவிர மொத்தமாக 5573 பாடசாலை மாணவர்களுக்கும் 492 பேருக்கு பூசர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளன. 768 பேருக்கு பாடசாலையிலிருந்து இடை விலகிய வருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

ஈழநாடு




# வரவு - செலவுத் திட்டம் 2022

**என்னால் சமர்ப்பிக்கப்படுவது சுதந்திர இலங்கையின் 76 ஆவது வரவு – செலவுத் திட்ட மாகும்.**
**இந்த வரவு – செலவுத்திட்டம் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங் கத்தினால் முன்வைக்கப்படும் இரண்டாவது வரவு – செலவுத் திட்டம் என்பதுடன் நிதி அமைச் சர் என்ற வகையில் எனது கன்னி வரவு – செலவுத்திட்ட உரையுமாகும்.**

## நஞ்சற்ற விவசாயத்துக்கு முன்னுரிமை

**பசுமை அபிவிருத்தி சட்டம்**



மண் மற்றும் நீர் வளங்களின் பாதுகாப்பு, வன ஜீவராசிகளின் சேத முகாமைத்துவம் பற்றிக் கவனம் செலுத்தி, எமது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. மர பணுப் பொறியியல் ரீதியான விவசாய உற்பத்திகளின் உற்பத்தித்திறனை அதி கரிக்கின்ற அதேவேளை அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய சேதங்களை தவிர்ப்பதற் கும் மூலோபாயத் திட்டமொன்று காணப்பட வேண்டும். தலால், எமது விவசாயிகளின் பாரம்பரிய அறிவை பாதுகாக்கின்ற, அவர்களின் காணி உரிமை மற்றும் பகிரப்பட்ட நீர் வளங் களுக்கான உரிமையை பாதுகாக்கின்ற, விவசாயம் தொடர்பில் மேற்கொள் கின்ற செயல்முறைக்கு விவசாயிகளின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்துகின்ற பசுமை விவசாய அபிவிருத்தி சட்ட மொன்றைத் தயாரிப்பதற்கு நான் முன் மொழிகிறேன்.

கொழும்புத் துறைமுகம் தெற்காசியா வில் நுழைவுத் துறைமுக வர்த்தகத்திற் கான மையமாக ஏற்கனவே காணப்படு கின்றது. கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு மற்றும மேற்கு முனையங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவுற்றதுடன் நுழைவுத்துறைமுக வர்த்தகம் விரிவாக் கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கமைய கொழும்புத் துறைமுகத் தினை நுழைவுத் துறைமுக மையமாக அபிவிருத்தி செய்வதற்கும் திருகோண மலைத் துறைமுகத்தை கைத்தொழில் துறைமுகமாகவும், காலி துறைமுகத்தை சுற்றுலாத் துறைமுகமாகவும் அம்பாந் தோட்டைத் துறைமுகத்தினை சேவைத் துறைமுகமாகவும் அபிவிருத்தி செய்வ தற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய வங்கிகள் தொழில்நுட் பத்தினைப் பயன்படுத்தும் வகையில் தம்மை மாற்றுதல் வேண்டும். புத்தாக் கங்கள் மிகவும் விரைவான சந்தையில் தேவையாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் வங்கிகள் தமது கிளைகளை டிஜிட்டல் மயப்படுத்தலினைப்பயன் படுத்தி ஸ்மாட் வங்கிகளாக மாற்றுவதற் காக ஊக்கமளிக்கப்படும். எனவே, மத் திய வங்கி மூலதன தேவைப்பாடுகள், அனுமதி வழங்குதல் உள்ளடங்களாக தேவையான சட்டங்கள், ஒழுங்குவிதி களை அறிமுகப்படுத்துவதற்கு தேவைப் படுத்தப்படுகின்றது.

தொழில்நுட்ப தொழில்முயற்சி யாண்மை பொருளாதாரத்தினை ஊக் கம் பெறச் செய்வதற்கு 2021 வரவுசெல வுத் திட்டம், 2023 அளவில் குருநாகல் (ரத்கல்ல) மற்றும் காலி (அக்மீமன) ஆகிய பிரதேசங்களில் ஏற்கனவே தாபிக்கப் பட்ட இரண்டு தொழில்நுட்பப் பூங்காக் களுடன் ஹபரன, நுவரெலியா (மஹகஸ் தொட்ட), கண்டி (திகன) ஆகிய இடங் களில் மூன்று புதிய தொழில்நுட்பப் பூங்காக்களைத் தாபிப்பதற்கு முன்மொழி யப்பட்டுள்ளது.

**செலவினங்கள் குறைப்பு**

தேசிய சேமிப்புகளை ஊக்குவிக்கின்ற போது அரசாங்கத்துறையும் பங்களிப்பு



செய்யவேண்டும் என்பதை நான் உறுதியாக நம்பு கின்றேன். இது தொடர்பில், மீண் டெழும் செலவினத்தை குறைப்பதற்கும் வேண்டப்பட்டுள்ளது. எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கப் படுகின்ற எரிபொருள் கொடுப்பனவை மாதமொன்றுக்கு 5 லீற்றர்களால் குறைக் கவும், அரச நிறுவனங்களின் தொலை பேசி செலவினங்களை 25 சதவீதத்தால் குறைக்கவும், சூரிய மின்சக்தி ஊடாக மின்சாரத்தை பெறுவதை ஊக்குவிக்க மின்சார செலவை 10 சதவீதத்தால் குறைக்கவும் முன்மொழிகிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒய்வூதியமொன்றை பெறுவதற்கு 5 வரு டங்களுக்கு தொடர்ச்சியாக பாராளுமன் றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவது தற் போது போதுமானதாகவுள்ளது. குறித்த ஐந்து வருடங்களை 10 வருடங்களாக நீடிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இம் முன்மொழிவானது திரட்டு நிதியத் தின் கீழ் சம்பளங்கள் கொடுப்பனவு செய் யப்படுகின்ற ஜனாதிபதி உள்ளடங்கலாக அனைத்துப் பதவிகளுக்கும் செல்லுபடி யானதாகும். இந்த முன்மொழிவை செயல்வடிவமாக்க சட்ட ஏற்பாடுகளின் தேவையுள்ளது.

அரசாங்க சேவையை பொதுமக்கள் எளிதாக அணுகவும் வினைத்திறன் மிக்க சேவையை பெறுவதை உறுதி செய்யவும் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்துக்கும் வாக்கு பத்திரமொன்று தயாரிக்கப்படுத். அது பொதுமக்கள் பார்வைக்கும் காட் சிப்படுத்தப்படும். இது அரச சேவையின் வினைத்திறனையும், உற்பத்தி திறனை யும் ஊக்குவிக்கும்.

**முரண்பாடுகளை அகற்ற புதிய சம்பள கட்டமைப்பு**

அரசாங்க சேவையின் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் தொடர்பில் திருத்தங்களை கொண்டுவருவதும் சம் பள கட்டமைப்புகளை ஸ்தாபிப்பதும் தேசிய சம்பள ஆணைக்குழுவின் பொறுப் பாகும். அத்தகைய நிறுவனங்கள் பொது வான கட்டமைப்பிலிருந்து விலகும்போது சம்பளக் கட்டமைப்பினுள் வேண்டாத சம்பள அளவுத்திட்டங்களும் முறைகேடு களும் புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின் றன. என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதனால், அடுத்த நிதி யாண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அரசாங்க சேவை சம்பளங்களில் காணப்படுகின்ற முரண் பாடுகளை அகற்றுவதன் மூலம் அர சாங்க சேவைக்கான புதிய சம்பளக் கட் டமைப்பு ஒன்று நிறுவப்படும்.

ஒழுக்காற்று நடைமுறையின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளவர்கள் தவிர, அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் மதிப்பீட்டு அறிக்கைகளின் தேவையின்றி சம்பள ஏற்றத்திகதியன்று சம்பள ஏற்றத்தை வழங்குவதன் மூலம் சம்பள நிர்வாக நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட வுள்ளன.

தொழிற்படையை வலிமைப்படுத் தும் பொருட்டு அரசாங்க சேவையிலி ருந்து ஓய்வுபெறும் வயதை 65 வருடங் களாக நீடிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

**சமுர்த்தி வங்கியை மீள் கட்டமைத்தல்!**

கிராமிய சமூகத்தின் நிதியியல் தேவைகளை நிறைவேற்றுகின்ற அரு காமையிலுள்ள நிதியியல் சேவை வழங்குநராகக் காணப்படுகின்ற சமுர்த்தி வங்கித் தொழில் இயக்கத்தை மீள்கட்டமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கிகளை நுண்பாக மற்றும் சிறிய தொழில் முயற்சிகளின் அபிவிருத் திக்கான நிதியியல் வசதிகள் மற்றும் வியா பார ஆலோசனை என்பன உள்ளடங்க லாக அனைத்து சேவைகளையு வசதி களையும் வழங்குகின்ற ஓர் இடத்திலான மையங்களாக மாற்ற முன்மொழிகிறேன்.

கூட்டுறவு மற்றும் கிராமிய வங்கி களின் வைப்பாளர்களுக்கு நேர்ந்ததாகக் கூறப்படுகின்ற மோசடிகள் பற்றி முறை யான விசாரணைகளை நடத்துவதற்கும் அத்தகைய மோசடிகள் இடம்பெற்றி ருப்பின் நிதியியல் சேதங்களுக்கு இழப் பீடு அளிப்பதன் மூலம் அத்தகைய வைப் பாளர்களுக்கு உதவுவதற்கும் அதேபோன்று கூட்டுறவு அமைப்பை மேலும் வலிமைப் படுத்துவதற்கும் தேவையான மீள்கட்ட மைத்தல் விரைவாக தொடங்கப்படும்.

**இறக்குமதி பத்திரம் இலகுபடுத்தப்படும்**



மதுபானம், சிக ரெட்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் உள்நாட்டில் தயா ரிக்கப்பட்ட விவ சாய உற்பத்திகள் தொடர்பான எச். எஸ். குறியீடுகள் நீக்கப்படுவதுடன், சுங்கத் தீர்வை மற்றும் செஸ் வரி வீதம் மற்றும் இறக்குமதியாளர்களுக்கான அனுமதிப் பத்திரம் பெறுதல் செயன்முறையும் இலகுபடுத்தப்படுத்தப்படும்.

தரப்படுத்தல் நிறுவனம் மற்றும் தொற் றுத் தடைக்காப்பு அதிகாரசபைகளிட மிருந்து அனுமதி பெறப்பட்டிருப்பின் அத்தகைய இறக்குமதியாளர்களுக்கு சுங்க அனுமதி வழங்கப்படும். வரி செலுத்துநர்களின் 20 சதவீதம் கொண்ட வரி சேகரிப்பை முகாமை செய்கின்ற ஆயினும் உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தால் ஈட்டப்படுகின்ற 80 சதவீத வருவாய்க்கு வகைகூறுகின்ற பெரும் வரி செலுத்துநர் அலகுகளின் ஒன்றுதிரட்டிய நிர்வாகத்தினூடாக அரசாங்கத்தின் வரி சேகரித்தலை வலுப் படுத்துவதற்கும், அதனூடாக அத்தகைய வரி செலுத்துநர்களிடமிருந்து கிடைக் கப்பெறவேண்டிய வரிகளை முறையாக சேகரிக்கவும் முன்மொழிகின்றேன்.

**வங்கிகள், நிதிநிறுவனங்களை ஒருங்கிணைத்தல்**




அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை கருத்திட்டம் பல்வேறு காரணங்களால் முழுமையாக செயல்படுத் தப்பட முடியாமல் போனது. கோவிட் - 19 காரணமாக கடந்த காலங்களில் தாமதமடைந்த கருமங்களுக்கு விரை வாக கவனம் செலுத்துவதன் மூலம் முறை மையை விரைவாக நடைமுறைப்படுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. இணையவழி வரிக்கொடுப்பனவு தளத்தைப் பயன்படுத்தி லங்கா கிளியரு டன் அனைத்து வங்கிகளையும் நிதி நிறு வனங்களையும் ஒருங்கிணைத்தலானது வரி நிர்வாகத்தின் அடிப்படை கூறொன் றாக அமைந்திருக்க வேண்டும். டிஜிற்றல் அடையாள இலக்கங்களின் பயன்பாடு மற்றும் வேறு சட்ட தேவைப்பாடுகள் தொடர்பில் வரிச் சட்டத்திற்கான திருத் தங்களைத் துரிதமாக அறிமுகப்படுத் துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

செல்லிட தொலைபேசிகளினதும் இணையத்தள சமிக்ஞைகளின் போதா மையின் தீவிரம் கோவிட் -19 உலகளா விய நோய்த்தொற்று காலப்பகுதியில் நடைமுறை ரீதியாக உணரப்பட்டது. முழு நாட்டுக்கும் செயற்பரப்பினை விஸ் தரிப்பதற்கும் நாட்டிலுள்ள அனைத்து 10,155 பாடசாலைகளுக்கும் பைபர் ஒப் டிக் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி அதிவேக அகலப்பட்டைஇணைய இணைப்புகளை வழங்குவதற்கும் தொலைத்தொடர்பு வலையமைப்பினை நிறுவுவதற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான நிதியியல் மற்றும் தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்படும்.

**ஓட்டோ அதிகார சபை**



முச்சக்கர வண்டி சேவையானது நாடு பூராகவும் அதிகளவு பரவியுள்ள போதி லும், இந்த சேவையை ஒழுங்குபடுத்த இது வரை, பொறிமுறையொன்று காணப்பட வில்லை. பெரியளவில் அது விரிவடை தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச் னைகள் காரணமாக இந்த சேவையை ஒழுங்குபடுத்துவதற்கான தேவை தோற் றம்பெற்றுள்ளது.

இந்நோக்கில், முச்சக்கரவண்டி ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரசபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் அதிகார சபை ஊடாக முச்சக்கர வண்டிக் கட்டணங் கள் மற்றும் சேவையை தரப்படுத்தல் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள் ளப்படும்.

**மூத்த பிரஜைகளுக்கு ஓய்வூதியம்**



துரிதமாக வய தடைகின்ற சனத் தொகையை பாது காப்பதற்கு தனித்துவ மான சமூகப் பாது காப்பு நிகழ்ச்சி திட்டம் ஏற்படுத்தப்படும். ஓய்வூதியம் பெறாத சிரேஷ்ட பிரஜை களுக்கு ஓய்வூதிய திட்டம் ஒன்று நிறு வப்படும்.

**மாற்று திறனாளிகளுக்கு சம வாய்ப்பு**



மாற்றுத் திறனாளி களுக்கு சம வாய்ப்பு, சம பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டும். இதற்காக மாற்று திற னாளிகளின் உரிமைகள் மீதான சட்டம் அறிமுகப்படுத்தப்படும். அவர்களின் தொழில் முயற்சிகளுக்கும் திறன் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சி திட்டம் ஒன்றும் தொடங்கப்படும்.

பிள்ளை மற்றும் உளநலம் தொடர் பில் தற்போது நிலவுகின்ற அடிப்படைப் பிரச்னைகளை இனங்காண்பதற்கும் அந்தப் பிரச்னைகளை தீர்ப்பதற்கும் சீரான நடவடிக்கைகளை எடுப்பதற் கான நிகழ்ச்சித்திட்டம் அறிமுகமாகும்.

**வியாபார பதிவு கட்டணம் இரத்து**

படித்த இளம் சந்ததியினர் தொழில் தேடி செல்லும் மனப்பாங்கிலிருந்து விடுபடவும், அவர்கள் தொழில் முயற்சி யாளர்கள், தொழில் வழங்குநர்களாக மாற்றம்பெறவும் அதற்கான தூண்டலை ஏற்படுத்த 2022ஆம் ஆண்டு முதல் வியா பார பதிவு கட்டணம் அறவிடப்படாது. அத்துடன், வியாபார பதிவுக்கான சிக்க லான முறைமையும் இலகுப்படுத்தப்படும்.

இது தொடர்பான கட்டணங்களை ஒன்றிணைக்க நிதிச் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தப்படும்.

உற்பத்தி பொருளாதாரத்தை ஊக்குவிக்க பழங்கள், மரக்கறி வகைகள், மீன் அடிப்படையிலான உற்பத்திகள், திரவப் பால் உற்பத்தி மற்றும் வர்த்தக பயிர்ச் செய்கையிலுள்ள பிரச்னைகள், தேவைப்பாடுகள் மற்றும் குறைபாடுகள் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மலர்கள் மற்றும் இலை வகைகள் பயிர்ச்செய்கைத் துறையில் காணப்படுகின்ற குறைபாடுகளை நீக்க உற்பத்தியாளர்களுக்கு அது தொடர்பான அறிவை வழங்கவும் - ஊக்குவிக்கவும் புதிய நிகழ்ச்சி திட்டம்.

மருந்துப் பொருட்கள் உற்பத்திக்காக எடுத்துள்ள வழிமுறைகளை தொடர்ந்தும் மேம்படுத்தி இலங்கையில் சர்வதேச அங்கீகாரத்தைக் கொண்ட நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சர்வதேச சந்தைகளை இலக்காகக் கொண்ட அதிகூடிய தரத்தைக்கொண்ட மருந்து வகைகளை இலங்கையில் தயாரிப்பதற்காக தனியார் துறைக்குத் தேவையான வசதிகளை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்கு முன்மொழிகின்றேன். மருந்துகளின் விலையை நிலையாகப் பேணுவதற்கு பொருத்தமான விலைப் பொறிமுறையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள சகல தரப்பினர்களையும் உள்ளடக்கிய குழுவின் ஆலோசனைகளை துரிதமாக நடைமுறைப்படுத்தப்படும்.

**சர்வதேச தரத்திலான பாடசாலை, மருத்துவமனை**



கல்வி மற்றும் சுகாதார வசதிகளில் அடையாளங்காணப்பட்ட மாவட்ட ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக எப்போதும் எமது அரசாங்கம் அக்கறை செலுத்துகின்றது. இதற்காக, தனியார் துறையும் எப்போதும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளது. இம்முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் நவீன பாணியில் சர்வதேசப் பாடசாலை ஒன்றையும் மருத்துவமனை ஒன்றையும் ஏற்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான காணிகளையும் வரிச் சலுகைகளையும் வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தற்போது தொழிற்படுகின்ற பசுமை நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு பசுமைப் முறி நிதியிடல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதற்கு விருப்பத்தைத் தெரிவிக்கின்ற வெளிநாட்டுத் தரப்பினருடன் கலந்துரையாடல்களைத் தொடங்குவதற்கும் அந்தக் கருத்திட்டங்களின் ஊடாக காலநிலை மாற்றங்களுக்கு பதிலிறுத்துவதற்கும் முன்மொழிகின்றேன். அரச வங்கிகளுக்கும் அதேபோன்று தனியார் வங்கிகளுக்கும் இந்த நிதியிடல் வசதிகளை விருத்திசெய்வதற்கு தேவையான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

உலகளாவிய காலநிலை மாற்றங்களுடன் இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்ததன் காரணமாக மண்சரிவு போன்ற திடீர் அனர்த்தங்கள் பாரியளவில் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், தனியார் வீடுகள், தொழிற்சாலைகள், பொது வசதிகள் உட்பட சகல நிருமாணங்களுக்குமான பரிந்துரைகளை தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதனை கட்டாயப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

எமது சனத்தொகையில் 80 சதவீதத்தற்கு அதிகமானவர்கள் விவசாயத் துறையைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். உற்பத்திப் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் போது விவசாயத் துறைக்கு கட்டாயமாக முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். எனவே, விவசாயத்துறைக்கு என்றுமில்லாதவாறு முதலீடு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துதுள்ளது. விவசாயத்துறையில் அரசாங்கத்தினால் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்னைகளை நாம் இனங்கண்டுள்ளோம். அவை, நிர்ணயிக்கப்படாத காணி உரித்து, பயிர்ச்செய்கைக்குப் போதிய நீர்கிடைக்காமை, உயர்தரமுடைய விதைகள் கிடைக்காமை, உரம் தொடர்பான பிரச்னைகள், தேவையற்ற நிர்வாக சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், விவசாய விரிவாக்கல் சேவைகளின் பற்றாக்குறை, நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டுப் பற்றாக்குறை, விவசாய இயந்திரம் மற்றும் உபகரணம் காணப்படாமை, விலங்குகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புகள், போதிய சந்தைப்படுத்தல் வசதிகள் காணப்படாமை, கிராமிய விவசாய உற்பத்திகளுக்கான உள்ளக உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை, விவசாய நடவடிக்கைகளுக்காக போதிய மற்றும் துரிதமான நிதிக் கடன் வசதி காணப்படாமை.

**நஞ்சற்ற விவசாய ஊக்குவிப்பு**



அதிக நச்சுத்தன்மையுடைய இரசாயன பாவனையை தவிர்த்தலும் மாற்று களைநாசினியை முறையாகப் பயன்படுத்தலும் பின்பற்றவேண்டிய சிறந்த விவசாய நடைமுறைகளாகும். எனவே, மாற்று களைநாசினிகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக ரூபாய் 4,00 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்தவகையில், விவசாய நிலங்களை தயார்படுத்தும்போது களைகளையும் களைநாசிகளின் பாவனையை குறைப்பதற்கும், ஆகக்கூடியது 2 ஹெக்ரேயர்களுக்கு, ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபாய் 5,000 நிதி உதவி

சேதனப் பசளைப் பொருளாதாரத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்கு இதுவரை காணப்பட்ட இரசாயனப் பசளை நிவாரணத்தற்குப் பதிலாக 2021/2022 பெரும்போகத்திலிருந்து விவசாயி ஒருவருக்கு தமது பயிர்ச்செய்கைக்குத் தேவையான உள்நாட்டு சேதனப் பசளையினை உற்பத்தி செய்வதற்கும் இரசாயன கிருமி நாசினிகளுக்குப் பதிலாக சேதன கிருமிநாசினி தயாரிப்பதற்கும் தேவையான ஆரம்ப தொழிற்படு மூலதனத்தினை வழங்குவதற்கும் களைநாசினியிளைப் பயன்படுத்தாமல் வயல்களில் களைகளைப் பிடுங்குவதற்கு விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற மேலதிக செலவை ஈடு செய்வதற்கு நிவாரணம் வழங்குவதற்கு தற்போது ரூ. 35,00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலகில் விவசாயத்துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாம் விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுத்தல் வேண்டும். புதிய விவசாயத் தொழில்நுட்பத்தை நிமுகப்படுத்துவதற்கு இதுவரை ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபாய் 17 இலட்சத்து 500 கோடிக்கு மேலதிகமாக மேலும் ரூபாய் 5 இலட்சம் கோடியை ஒதுக்கீடு செய்கிறேன்.

**மீன்பிடி**



2022 நிதி வருடத்தில், 200,000 ஹெக்ரெயர் நன்னீர் நிலைகளில் 196 மில்லியன் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டது. இதன்மூலம் ரூபாய் 18,00 கோடி பெறுமதியான 125,000 மெற்றிக் தொன் அறுவடையை பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மீன்பிடி நங்கூரத்தளங்கள் மற்றும் மீன்பிடி துறைமுகங்களின் அபிவிருத்தி மற்றும் நிருமாணம போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் தற்போது செயற்படுத்தப் பட்டு வருகின்றது. இந் நடவடிக்கைகளுக்காக தற்போது ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக ரூ. 100 கோடியை ஒதுக்கீடு.

**கால்நடை**

பால், முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்திக்காக தனியார் துறையின் நடுத்தர மற்றும் பெரும் முதலீடுகளையும் ஊக்குவிக்கின்ற அதே வேளையில் அந்த உற்பத்திக்காக செலவாகின்ற மூலப்பொருள் மற்றும் புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் செலவை குறைப்பது அவசியமாகும். இதற்கமைவாக, கால்நடை வளத்துறை அபிவிருத்திக்காக தொடர்ந்தும் முதலீடு செய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது. அதற்காக தற்போது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக மேலும் ரூபாய் 100 கோடியை ஒதுக்க எதிர்பார்க்கிறேன்.

பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலான பிரம்பு, களிமண், பித்தளை, அரக்கு, முகமூடி, சிரட்டை, ஆபரணங்கள், சிற்பங்கள் மற்றும் பண் வடிவம் போன்ற பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக மேலும் ரூபாய் 100 கோடி ஒதுக்கப்படும்.

பற்றிக் தயாரிப்புக்கள் மூலம் 2025 ஆம் ஆண்டில் 100 கோடி டொலர்களை ஏற்றுமதி வருமானமாக இலக்கு வைத்துள்ளோம். இதனால், கைத்தறி மற்றும் பற்றிக் உள்ளிட்ட புடைவைக் கைத்தொழிலை முன்னேற்றுவதற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு.

சேதனப் பசளை உற்பத்தி கைத்தொழில்கள், மருந்துப்பொருள் உற்பத்தி, புடைவை, ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் உற்பத்தி, இறப்பர் சார்ந்த உற்பத்திகள், ஏற்றுமதிக் கைத்தொழில் திட்டங்கள், கால்நடை வளங்கள் விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திர சாதன தயாரிப்பு, மீன்பிடி மற்றும் நீர்வாழ் உற்பத்திகள், மின்சார மற்றும் இலத்திரணியல் உபகரணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உற்பத்திகள், விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்பு, உருக்கு மற்றும் பார உலோகக் கைத்தொழில் இந்தத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தனியார்துறைக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

இந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவது எமது பொறுப்பாகும். அதற்கமைவாக புதிதாக உருவாக்குகின்ற உற்பத்தி முதலீட்டு வலயத்துக்கு தேவையான காணி, மின்சாரம், நீர், உள்ளக மற்றம் வெளியக அணுகுகை வீதி போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுக்கும் பொருட்டு ரூபாய் 500 கோடி ஒதுக்குகிறேன்.

**பதனிடல், மீன்பிடி வலயமாக யாழ்ப்பாணம்**

இதன்போது அடையாளம் காணப்பட்ட ஒவ்வோர் உற்பத்தித்துறைக்கும் அமைவாக ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உற்பத்தி முதலீட்டு வலயங்களாக சேதனப் பசளை உற்பத்திக்காக - விவசாய மாவட்டங்கள் அனைத்தும் உள்வாங்கப்பட்டுள்ளன.

மருந்து உற்பத்திக்காக - ஓயாமடுவ, மில்லெனிய மற்றும் ஆருகம்பொக்க பிரதேசங்கள், புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில்கள் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏறாவூர், மொனராகலை, புத்தளம் மற்றும் கிளிநொச்சி, ஏற்றுமதி, விவசாய பதனிடல் வலயத்துக்கு - மாத்தளை, அல்பிட்டி, அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம், கால்நடை வளங்கள் வலயத்திற்கு - நாவலப்பிட்டி, வாரிய பொல, பொலநறுவை ஆகிய பிரதேசங்களும் தனியார் முதலீட்டின் ஊடாக தாபிக்கப்படுகின்ற மீன்பிடி மற்றும் நீர்வாழ் உற்பத்தி வலயத்திற்கு- புத்தளம், மன்னார், அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் கொக்கட்டிச்சோலை போன்ற பிரதேசங்களும் இரசாயன பொருள் உற்பத்திக்கு - பரந்தன், புல்மோட்டை மற்றும் எப்பாவலை போன்ற பிரதேசங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் வலயங்கள் அமைப்பதற்கும் அதற்கான வசதிகளை செய்து வழங்குவதற்கும் 5 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

அனைவருக்கும் நீர் திட்டத்தை நிறைவேற்ற கவனம் செலுத்துகிறோம். இதனால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அத்தனகல்ல, மினுவாங்கொடை, குருநாகல், கண்டி, அனுராதபுரம் வடக்கு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட நீர்வழங்கல் திட்டங்களை துரிதமாக நிறைவு செய்து நாடு பூராவும் இலக்கு வைக்கப்பட்டுள்ள 3,31,4,,500 புதிய நீரிணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இதனை துரிதப்படுத்த, ரூபாய் 3,396 கோடி ரூபாய் ஏற்பாட்டுக்கு மேலதிகமாக மேலும் 1500 கோடி ரூபாய் ஒதுக்கீடு

நாட்டின் விநியோகப் பொறிமுறையை விரிவுபடுத்த, சகல கிராமங்களையும் இணைக்க ஒரு இலட்சம் கி. மீற்றர் வீதி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. அத்துடன், அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்கவும் 26, 000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2,000 கோடி வழங்கப்படும்.

கரியமில வாயுவை வெளியேற்றும் வாகனங்களுக்கு பதிலாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதிக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதற்காக தனியார்துறைக்கு மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி துறையில் முதலீட்டு வாய்ப்புக்கள் திறக்கப்பட்டுள்ளது. இதனூடாக 2030 ஆம் ஆண்டளவில் மொத்த சக்தி தேவையில் 70 சதவீதத்தை மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் ஊடாக பூர்த்தி செய்வதற்குத் தேவையான முதலீடுகளை 2022 ஆம் ஆண்டில் துரிதப்படுத்தப்படும். இதற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 19 கோடிக்கு மேலதிகமாக ரூ. 50 கோடி ஒதுக்கீடு.

இதற்கமைய, தனியார்துறையின் ஒத்துழைப்புடன் அடுத்த மூன்று வருடங்களுக்குள் தேசிய மின்சாரத் தொகுதிக்கு கிட்டத்தட்ட 2,000 மெகா வோட் மேலதிக மின்சாரத்தை உமா ஓயா, பூநகரி, சியம்பலாண்டுவ, மன்னார், புரோட்லாண்ட், மொறகொல்ல மற்றும் சீதாவக்க ஆகிய மீள் மின் புதுப்பிக்கத்தக்க மின் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்து மின்சாரத் தொகுதிக்கு சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

நகர வீடமைப்புக்காக ரூபாய் 200 கோடி மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக ரூபாய் 500 கோடிகிராமிய வீடமைப்பு அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தோட்ட மக்களின் வீடமைப்புக்காக அடுத்த மூன்று வருடங்களுக்கு ரூ. 50 கோடி ஒதுக்கீடு.

4,917 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதன்படி 1966.8 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**எம். பிக்களுக்கான ஒதுக்கீடு**

இதனூடாக நீங்கள் உள்ளடங்களாக 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்பார்க்கைகள், மாவட்ட மட்டத்தில், பரந்தளவில் எய்தப்படக்கூடியதாகவிருக்கும். அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் உரிய பிரிவுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை 50 இலட்சத்தால் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 2022 ஆம் ஆண்டுக்காக அபிவிருத்தி வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீடுகளைக் கொண்ட ரூபாய் 150 இலட்சம் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும். இதற்கான மொத்த ஒருக்கீடு ரூபாய் 335.7 கோடியாக இருக்கும்.

அனைத்து 335 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 25 மாவட்டங்களையும் உள்ளடகுகின்ற மொத்த ஒதுக்கீடு மேலும் ரூபாய் 19,894 மில்லியன் தொகையை எட்டுகின்றது. இவ்வொதுக்கீடுகளுக்கான ஏற்பாடானது,காணி, சனத்தொகை மற்றும் ஏனைய சமூக - அரசியல் காரணிகளின் காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

“கமசமக பிலிசந்தர” கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 85,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன். (நாளை வரும்)



# இன்சுலினுக்கு இப்போது வயது 100

■ தி.முருகன்

கைத் தொலைபேசியை பிடுங்கிவிட்டு அறைக்குள் அடைத்து வைத்தால் உயிரே போய்விடும் பலருக்கு. சமூக ஊடகங்கள் இல்லாவிட்டால், மடிக்கணினி இல்லாவிட்டால் பைத்தியமாகி விடுவார்கள் பலர். நவீனத் தொழில்நுட்பங்கள் இல்லாத ஓர் உலகில் சில மணி நேரம் உயிர் வாழ்வதை பலரால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆனால் நீரிழிவு நோயாளிகளுக்குத் தெரியும், "இன்சுலின் இல்லாத ஓர் உலகில் நம்மால் வாழமுடியாது" என்று! நவம்பர் 14ஆம் திகதி உலக நீரிழிவு நாள். இந்த ஆண்டு இதை அனுசரிக்கும் நேரத்தில், இன்சுலினைக் கண்டுபிடித்து 100 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன.

நவீன மருத்துவத்தின் மிக முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்றாக இன்சுலினைச் சொல்கிறார்கள். இன்றைக்கு கொரோனாத் தடுப்பூசிகளைக் கண்டறிந்த பல நிறுவனங்கள் இஷ்டத்துக்கு அதற்கு விலை நிர்ணயம் செய்தபோது, "ஆராய்ச்சிக்காக அவர்கள் போட்ட முதலீட்டை எடுக்க வேண்டாமா?" என்று நம்மில் பலரே நியாயப்படுத்துகிறோம். (இத்தனைக்கும் இதில் பல தடுப்பூசிகளின் ஆராய்ச்சிகளுக்கு அரசுகளே நிதி அளித்திருந்தன!) ஆனால், இன்சுலினைக் கண்டுபிடித்தவர்கள் அதன் காப்புரிமைக்காகப் பெற்றது வெறும் ஒரு அமெரிக்க டொலர். மகத்தான அந்த மருந்து, குறைந்த விலையில் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று நினைத்தனர்.

நீரிழிவு நோயாளிகளின் வாழ்க்கையை இன்சுலினுக்கு முன்/இன்சுலினுக்குப் பிறகு என இரண்டாகப் பிரிக்கலாம். குறிப்பாக கணையம் செயலிழந்து இன்சுலின் சுரக்க இயலாத நிலையில் இருக்கும் நீரிழிவு நோயாளிகளுக்கு! 1921ஆம் ஆண்டு இன்சுலினைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு அவர்களால் நீண்ட காலம் உயிர்வாழ முடியவில்லை. கடும் உணவுக் கட்டுப்பாட்டில் இருக்கச் சொல்வதைத் தவிர, மருத்துவர்களுக்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஒரு குழந்தைக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டால், சில ஆண்டுகளில் ஒன்று அது முற்றி, சாகும் அல்லது, பட்டினியால் சாகும். இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்ட பிறகே அவர்கள் முதுமையை தரிசித்தனர். இரண்டாவது வகை நீரிழிவு நோயாளிகளுக்கும் ஒரு கட்டத்தில் இன்சுலின் சுரப்பு குறையும்போது இதுவே ஆபத்பாந்தவனாகக் காப்பாற்றுகிறது. பல லட்சம் குடும்பங்களின் கண்ணீரைத் துடைத்த அற்புதக் கண்டுபிடிப்பு அது. நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த இன்சுலினுக்கு மாற்று வேறு எதுவும் வரவில்லை என்பதே அதன் மகத்துவத்தை உணர்த்துகிறது.

இன்சுலினைக் கண்டறியும் முயற்சி, அதற்கும் 50 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது. மனிதர்களைப் போலவே நாய்களுக்கும் நீரிழிவு நோய் வரும் என்பதால், இந்தப் பரிசோதனையில் ஏராளமான நாய்கள் உயிர்த்தியாகம் செய்தன. ஆரோக்கியமான நாய்களின் கணையத்தை சத்திர சிகிச்சை செய்து அகற்றியபிறகு, அவற்றின் உடலில் சீனி அதிகரித்தது. எனவே, "நீரிழிவு நோய் வருவதற்கு கணையத்தில் ஏற்படும் ஏதோ ஒரு பிரச்னைதான் காரணம்" என்று ஆய்வாளர்களுக்கு புரிந்தது. அடுத்தடுத்த ஆண்டுகளில் கணையத்தை இப்படி அப்படி ஆராய்ச்சி செய்து சம்பவ இடத்தை நெருங்கினர். கணையத்தின் லங்கார்ஹன் திட்டுக்கள் பகுதியில் சுரக்கும் ஏதோ ஒரு திரவம்தான் நீரிழிவு ஏற்படுவதைத் தடுக்கிறது என்று புரிந்துகொண்டனர். அதற்கு 'இன்சுலின்' என்று ஒருவர் பெயரும் வைத்துவிட்டார்.

1916ஆம் ஆண்டு ருமேனிய மருத்துவரான நிகோலே பாலெஸ்கு என்பவர் ஒரு நாயின் கணையத்திலிருந்து சுரப்பைத் தனியாகப் பிரித்தார். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நாய்க்கு அதைச் செலுத்தியதும், அதன் ரத்த சினி அளவு இயல்பானது. தான் மிக முக்கியமான கண்டுபிடிப்பைச் செய்திருப்பது அவருக்குப் புரிந்தது. ஆனால், அந்த நாய் சீக்கிரமே இறந்துவிட்டது. சில நாள்களில் முதல் உலகப் போர் வந்தது. மருத்துவர் அவசரமாக இராணுவ சேவைக்குப் போக வேண்டி இருந்ததால், அந்த ஆராய்ச்சி தடைப்பட்டது.

1920 ஒக்ரோபர்- கனடாவைச் சேர்ந்த ஃபிரடெரிக் பேன்டிங் என்ற மருத்துவர் நாயின் கணையத்திலிருந்து தூய்மையான இன்சுலினைப் பிரித்தெடுக்க முடியும் என்று தன் ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். அவருக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை. டொரன்டோ பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற மருத்துவப் பேராசிரியர் மேக்லியோட் என்பவரிடம் போய் இதைச் சொன்னார். பேன்டிங் ஒரு சாதாரண அறுவை சிகிச்சை நிபுணர். பெரிதாக ஆராய்ச்சி செய்த அனுபவமும் இல்லை. அதனால் இவர் சொல்வதை எந்த அளவுக்கு நம்புவது என்று மேக்லியோட்டுக்குத் தயக்கம் இருந்தது என்றாலும், பேன்டிங் விடாமல் வற்புறுத்தியதால், தன் ஆராய்ச்சி நிலையத்தை அவருக்குக் கொடுத்தார். கூடவே, சார்லஸ் பெஸ்ட் என்ற ஆய்வக உதவியாளரையும் அனுப்பி வைத்தார்.

1921 ஜூலை 30- பேன்டிங்கும் பெஸ்ட்டும் இணைந்து ஒரு நாயின் கணையத்திலிருந்து இன்சுலினை வெற்றிகரமாகப் பிரித்து எடுத்தனர். "இதன்மூலம் நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைக்க முடியும்" என்று அவர்கள் சொன்னதைக் கேட்டு சக மருத்துவர்கள் சிரித்தனர். "பழுப்பு நிறத்தில் சேறு மாதிரி இருக்கும் இதைப் போய் மருந்து என்கிறீர்களே?" என்று கேட்டனர்.

"நாய் எண் 410" என்று பெயரிடப்பட்ட தீவிர நீரிழிவு நோயாளி நாய் ஒன்றுக்கு அந்த இன்சுலின் செலுத்தப்பட்டது. நாயின் ரத்த சீனி அளவு சில நிமிடங்களில் இயல்புக்கு வந்தது. மரணத்தின் விளிம்பில் இருந்த அந்த நாயை, பேன்டிங் கண்டுபிடித்த இன்சுலின் 70 நாள்கள் உயிருடன் வைத்திருந்தது. இன்சுலின் தீர்ந்தபிறகே அந்த நாய் செத்துப்போனது.

இன்சுலினின் செயல்திறனைப் பார்த்துப் பேராசிரியர் மேக்லியோட் திகைத்துவிட்டார். ஒரு மாபெரும் மருத்துவத் திருப்பத்தின் மையத்தில் நிற்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டார். தன் ஆய்வுக்கூடத்தில் நடைபெற்று வந்த மற்ற ஆராய்ச்சிகளையெல்லாம் நிறுத்திவிட்டு இன்சுலின் ஆராய்ச்சிக்கு இடவசதி செய்து கொடுத்தார். நாய்களிலிருந்து எடுக்கும் இன்சுலின் போதுமானதாக இல்லை என்பதால், கன்றுக்குட்டிகளிலிருந்து எடுத்தார் பேன்டிங். என்றாலும் "இது மனிதர்களுக்குக் கொடுக்கும் அளவுக்குப் பாதுகாப்பானதா" என்ற சந்தேகம் மேக்லியோடுக்கு இருந்தது. ஜேம்ஸ் காலிப் என்ற உயிர் வேதியியலாளரை உதவிக்கு அழைத்தார். இப்போது குழு முழு வேகத்துடன் உழைத்து ஒரே மாதத்தில் தூய்மையான இன்சுலினைப் பிரித்தெடுத்தது.

1922 ஜனவரி 11. கனடாவின் டொரன்டோ பொது மருத்துவமனை. முற்றிய முதலாவது ரக நீரிழிவு நோயுடன் லியனார்டு தாம்சன் என்ற 14 வயதுச் சிறுவன் அனுமதிக்கப்பட்டிருந்தான். கோமா நிலைக்குச் செல்லும் அளவுக்கு பாதிப்பு. அவனுக்கு இன்சுலினைச் செலுத்த அனுமதி கேட்டார் மருத்துவர் பேன்டிங். இது வரை மனிதர்கள் யாரிடமும் பரிசோதிக்கப்படாத மருந்து. "இதைக் கொடுக்காவிட்டாலும் மகன் சாகத்தான் போகிறான். கொடுத்து ஏதாவது பாதிப்பு வந்தாலும் பரவாயில்லை" என்று தந்தை ஹரோல்டு தாம்சன் சம்மதம் தெரிவித்தார்.

இப்படித்தான் இன்சுலின் இன்ஜெக்‌ஷனைப் பெற்ற முதல் மனிதன் ஆனான் லியனார்டு தாம்சன். அது அவன் ரத்த சீனி அளவை உடனடியாகக் குறைத்தது. ஆனால், எல்லோரும் நினைத்ததுபோல அது பரிசுத்தமான இன்சுலின் இல்லை. அதனால் லியனார்டு உடலில் ஒவ்வாமை ஏற்பட்டது. அடுத்த டோஸ் இன்சுலின் தருவதை உடனடியாக நிறுத்தினர். உயிர் வேதியியலாளர் ஜேம்ஸ் காலிப் அடுத்த 12 நாள்கள் இரவும் பகலுமாகப் பல வேதிவினைகளைச் செய்து அந்த இன்சுலினைத் தூய்மையாக்கினார். ஜனவரி 23ஆம் தேதி லியனார்டுக்கு இரண்டாவது டோஸ் இன்சுலின் போடப்பட்டது. இப்போது அலர்ஜி ஏற்படவில்லை. எலும்பும் தோலுமாகப் படுக்கையில் கிடந்த அந்தச் சிறுவன், அடுத்தடுத்து இன்சுலின் போட்டதும் உற்சாகமாகி எழுந்து விளையாட ஆரம்பித்தான். டாக்டர் பேன்டிங் குழுவினர் ஆனந்தக் கண்ணீர் சிந்தினர்.

"நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைக்க இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது" என்ற செய்தி காட்டுத்தீப்போல உலகெங்கும் பரவியது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இவான்ஸ் ஹ்யூக்ஸின் மகள் எலிசபெத் ஒரு நீரிழிவு நோயாளி. அமைச்சர் தன் மகளை அழைத்துக்கொண்டு கனடாவுக்கு விரைந்து வந்தார். அவரே இன்சுலின் போட்டுக்கொண்ட முதல் அமெரிக்கர். இப்படி வெளிநாடுகளிலிருந்து பலர் வருவது ஒருபுறம் இருக்க, வெளிநாட்டு மருத்துவர்களும் இன்சுலினைக் கேட்க ஆரம்பித்தார்கள். அமெரிக்காவின் ஏலி லில்லி மருந்து நிறுவனம் இதற்காக ஒப்பந்தம் செய்து, 1922 நவம்பரில் விற்பனைக்கே கொண்டுவந்துவிட்டது.

இன்சுலினைக் கண்டுபிடித்ததற்காக 1923ஆம் ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு ஃபிரடெரிக் பேன்டிங் மற்றும் பேராசிரியர் மேக்லியோட் ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்டது. "என் ஆராய்ச்சிக்கு உதவிய பெஸ்ட்டுக்கும் இதில் பங்கு உண்டு" என்று சொல்லி, அவருடன் தன் பரிசுத் தொகையைப் பகிர்ந்துகொண்டார் பேன்டிங். "இன்சுலினைச் சுத்திகரிக்க உதவிய ஜேம்ஸ் காலிப்புக்கும் இதில் பங்கு உண்டு" என்று சொல்லி, தன் பரிசுத் தொகையை அவருடன் பகிர்ந்துகொண்டார் மேக்லியோட். இந்த அரிதான பெருந்தன்மையைக் கண்டு நோபல் கமிட்டி திகைத்துவிட்டது.

தாங்கள் கண்டுபிடித்த இன்சுலினுக்குக் காப்புரிமை வாங்க வேண்டும் என்று இவர்கள் நினைக்கவில்லை. ஒரு நீரிழிவு நோயாளி ஆயுள் முழுக்க இன்சுலினைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் என்பதால், உலகம் முழுக்க எல்லோருக்கும் இது மலிவு விலையில் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஆனால், இவர்களின் அனுமதி இல்லாமலே ஒரு மருந்து நிறுவனம் இதற்குக் காப்புரிமை வாங்க முயன்றது. அப்படி அவர்கள் செய்திருந்தால், அவர்கள் மட்டுமே இன்சுலினைத் தயாரித்திருக்க முடியும். அதற்கு என்ன விலை சொன்னாலும், உலகம் கொடுத்திருக்க வேண்டும்.

இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்காக இவர்கள் நால்வரும் இணைந்து, இன்சுலின் காப்புரிமையை டொரன்டோ பல்கலைக்கழகத்துக்குக் கொடுத்துவிட்டு ஒற்றை அமெரிக்க டாலரை அடையாளத் தொகையாகப் பெற்றுக்கொண்டார்கள். "இன்சுலினைப் பிரித்தெடுக்கும் வழிமுறையை நாங்கள் வெளிப்படையாகத் தருகிறோம். யார் வேண்டுமானாலும் இந்த முறையைப் பின்பற்றித் தயாரிக்கலாம். ஆனால், கொள்ளை லாபம் பார்க்க முயற்சி செய்யக் கூடாது" என்று எழுதியும் கொடுத்தார்கள். மருத்துவ அறத்தின் உச்சமாகப் பார்க்கப்படுகிறது இந்தச் செயல்.

ஆரம்பக்காலத்தில் கால்நடைகள் மற்றும் பன்றிகளின் கணையத்திலிருந்து இன்சுலின் பிரித்தெடுக்கப்பட்டது. அதில் சிலருக்கு ஒவ்வாமை வந்தது. 40 ஆண்டுகளுக்கு முன்பு சிந்தெடிக் இன்சுலின் அறிமுகமானபிறகு, யாருக்கும் ஒவ்வாமை பிரச்னை இல்லை. இன்சுலின் பேனா, இன்சுலின் பம்ப் எல்லாம் வந்தபிறகு இதைப் பயன்படுத்துவது இன்னும் எளிதாகிவிட்டது. பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலை ஏறினால் பெரும் கூக்குரல் எழுவதுபோலவே, இன்சுலின் விலை ஏறினாலும் சர்ச்சையாகிறது. மாத பட்ஜெட்டில் இன்சுலினுக்கு ஒரு தொகை ஒதுக்க வேண்டிய நிலையில் நிறைய குடும்பங்கள் இருக்கின்றன. இப்போது அமெரிக்காவில் இன்சுலின் விலை தாறுமாறாக உயர்ந்திருப்பது அங்கே ஜோ பைடன் அரசுக்குப் பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.


என்ன செய்வது- சில கண்டுபிடிப்பாளர்கள் போல பல மருந்து நிறுவனங்கள் மருத்துவ அறத்தைப் பின்பற்றுவதில்லையே! ■




# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
விடைகள்

நேரம் : 1 மணித்தியாலம்

| | | |
|---|---|---|
| 15. | நாற்பத்தொன்பதாயிரத்து ஐம்பத்தொன்று | ( 2 புள்ளி ) |
| 16. | 56709, 56907, 56079 ( 40000-60000 இற்கு இடைப்பட்ட எண் ) | ( 2 புள்ளி ) |
| 17. | 15 முக்கோணங்களுக்கு நிழற்ற வேண்டும். | ( 2 புள்ளி ) |
| 18. | XIII | ( 2 புள்ளி ) |
| 19. | (i) 8 (ii)  | ( 2 புள்ளி ) |
| 20. | 375 ml | ( 2 புள்ளி ) |
| 21. | கனவுரு, 12, 6, 8 | ( 2 புள்ளி ) |
| 22. | 320 பிள்ளைகள் | ( 2 புள்ளி ) |
| 23. | (i) 8 cm 8 mm<br>(ii) 22 cm 3 mm | ( 1 புள்ளி )<br>( 1 புள்ளி ) |
| 24. | (i) தென்மேற்கு<br>(ii) மேற்கு, U | ( 1 புள்ளி )<br>( 1 புள்ளி ) |
| 25. | 12 : 55 | ( 2 புள்ளி ) |
| 26. | 90 தோடம்பழங்கள் | ( 2 புள்ளி ) |
| 27. | 95 kg 750 g / 95750 kg | ( 2 புள்ளி ) |
| 28. | ரூபாய் 240.00 | ( 2 புள்ளி ) |
| 29. | (i) 25ஐக் குறிக்குக<br>(ii) 130 மாணவர்கள் | ( 1 புள்ளி )<br>( 1 புள்ளி ) |

| | | | |
|---|---|---|---|
| 30. | (3) |  | ( 1 புள்ளி ) |
| 31. | (1) | உள்ளத்தைத் தளர்த்துதல் | ( 1 புள்ளி ) |
| 32. | (2) | பலா, வேம்பு, கொய்யா, முதிரை | ( 1 புள்ளி ) |
| 33. | (2) | ஆவணி மாதம் | ( 1 புள்ளி ) |
| 34. | (3) | விலங்கினால் பரவலடைகின்றது. | ( 1 புள்ளி ) |
| 35. | (2) | பிரண்டை, கள்ளி, கற்றாளை | ( 1 புள்ளி ) |
| 36. | (3) | புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன. | ( 1 புள்ளி ) |
| 37. | (3) | தவளை | ( 1 புள்ளி ) |
| 38. | (3) | வரிக்குதிரை | ( 1 புள்ளி ) |
| 39. | (2) | முட்டை - குடம்பி - கூட்டுப்புழு - நிறையுடலி | ( 1 புள்ளி ) |
| 40. | (3) | தேசிய இலச்சினை | ( 1 புள்ளி ) |
| 41. | (2) | கேகாலை, அநுராதபுரம் | ( 1 புள்ளி ) |
| 42. | (3) | வெசாக், தீபாவளி, ரம்ழான், பெரியவெள்ளி | ( 1 புள்ளி ) |
| 43. | (2) | கலாவாவி - தாதுசேனன் | ( 1 புள்ளி ) |
| 44. | (3) | யாழ்ப்பாணக்கோட்டை | ( 1 புள்ளி ) |
| 45. | (3) | பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள். | ( 1 புள்ளி ) |
| 46. | (1) | வலது புறத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு. | ( 1 புள்ளி ) |
| 47. | (3) | உணவு சமைக்கும் போது தலைமுடி, மூக்கைத் தொடுதல். | ( 1 புள்ளி ) |
| 48. | (1) | வீட்டிற்கு ஓட்டினால் அமைக்கப்பட்ட கூரை அமைத்தல். | ( 1 புள்ளி ) |
| 49. | (2) |  | ( 1 புள்ளி ) |
| 50. | (3) | திரிகைக்கல் | ( 1 புள்ளி ) |
| 51. | (1) | வெள்ளைத் திசுத்தாள் | ( 1 புள்ளி ) |
| 52. | (2) | போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் | ( 1 புள்ளி ) |
| 53. | (2) | சிறுநீரகங்கள் ஆரோக்கியமாக இருக்கும். | ( 1 புள்ளி ) |
| 54. | (3) | ரீ.பீ ஜாயா | ( 1 புள்ளி ) |
| 55. | (3) |  | ( 1 புள்ளி ) |
| 56. | (3) | நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை | ( 1 புள்ளி ) |
| 57. | (2) | சக்கரத்தில் விழும் நீரோட்டத்தின் வேகத்தை அதிகரித்தல் | ( 1 புள்ளி ) |
| 58. | (1) | அசுத்த நீரைப் பயன்படுத்தல். | ( 1 புள்ளி ) |
| 59. | (2) | குறைந்த செலவில் பருவகாலச்சீட்டினைப் பெற்று பயணிக்கமுடியும். | ( 1 புள்ளி ) |

60. பொருத்தமான வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக. ( 6 புள்ளிகள் )

முழு விடைத்தாளையும் கவனத்திற் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதியிருப்பின் 2 **புள்ளிகள்** வழங்கவும்.

# உணவுப்பொருட்களின் விலை பெருமளவில் உயர்வு!

கொழும்பு, நவ. 13

இலங்கையில் காய்கறிகள், மசாலாப் பொருட்கள், கருவாடு, பழங்கள் மற்றும் மீன் உள்ளிட்ட அன்றாட உபயோகப் பொருட்களின் விலைகள் எதிர்பாராத அளவு உயர்ந்துள்ளன என நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ பாகற்காய் 400 ரூபாய்க்கும், லீக்ஸ், கரட், புடலங்காய் மற்றும் போஞ்சி ஒரு கிலோ 320 ரூபாய்கும், கோவா ஒரு கிலோ 240 ரூபாய்க்கும், பீற்றூட் ஒரு கிலோ 200 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

தேசிக்காய் ஒரு கிலோ 800 ரூபாய் வரையிலும், பச்சை மிளகாய் ஒரு கிலோ 500 ரூபாய் வரையிலும், தக்காளி ஒரு கிலோ 700 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

கடந்த இரண்டு வாரத்துக்கு முன்னர் ஒரு கிலோ கிராம் தக்காளி 200 ரூபாக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்



போது 700 ரூபாய் வரை அதிகரித்துள்ளது எனவும், தக்காளி கொள்வனவு செய்வதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

100 கிராம் மிளகாய் தூள் 102 ரூபாய் வரையிலும், 100 கிராம் மிளகு தூள் 220 ரூபாய் வரையிலும், 100 கிராம் மசாலா தூள் 105 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது.

இலங்கையில் அதிகமாக உணவுக்காகப் பெற்றுக்கொள்ளப்படும் நெத்தலி, கருவாடு விலை பாரிய அளவு அதிகரித்துள்ளது எனவும் சில்லறை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

நெத்தலி ஒரு கிலோ கிராமின் விலை 1,500 - 1,600 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. இரண்டாம் நிலையில் இலங்கை நெத்தலி ஒரு கிலோ கிராம் 1200 - 1300 ரூபாய் வரை உயர்வடைந்துள்ளது. கருவாடு ஒரு கிலோ கிராமின் விலை 1000 -1500 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.வாழைப் பழம், அப்பிள், திராட்சைபழம், பப்பாசிப்பழம் போன்ற பழங்களின் விலைகளும் பாரிய அளவு அதிகரித்துள்ளது எனக் கூறப்படுகின்றது. (இ)



## ‘கொரோனா’ வீதி நாடகம்

நானுஓயா, நவ. 13


மலையகத்தில் ‘கொரோனா’ விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நானுஓயா, டெஸ்போட் “பி“ பிரிவிலும் கொரோனாவை ஒழிப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தோட்ட நிர்வாகமும் ‘சேவ் த சில்ரன்’ நிறுவனமும் இணைந்து, கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான விழிப்புணர்வை, வீதி நாடகம் மூலம் வழங்கி வருகின்றன. (இ)

# தொற்று எண்ணிக்கை 15 வீதத்தால் அதிகரிப்பு

## மீண்டும் நெருக்கடி நிலைமை



**கொழும்பு, நவ. 13**

**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 வீதத்தால் அதிகரித்துள்ளது எனச் சுகாதாரத்துறையினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

இந்நிலைமை தொடருமானால் நாட்டில் மீண்டும் நெருக்கடி நிலைமை உருவாகும் எனவும், எனவே, மக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள வைத்திய சாலைகளில் 64 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் தற்போது சிகிச்சை பெறுகின்றனர். மேலும் 104 நோயாளர்களுக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டுள்ளது எனவும் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நேற்றுமுன்தினம் 715 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# டெங்கு வைரஸின் 4 வகைகளும் தற்போது இலங்கையில் பரவல்!

## அபாய நிலையைச் சுட்டிக்காட்டுகின்றார் வைத்திய அதிகாரி

கொழும்பு, நவ. 13

நாட்டில் டெங்கு நோய், தொற்று நோயாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

டெங்கு வைரஸின் நான்கு வகைகளும் தற்போது இலங்கையில் பரவியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வீட்டுச் சூழல் உட்பட நுளம்புகள் பெருகும் அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொதுமக்களை அவர் கேட்டுள் ளார். நாடளாவிய ரீதியில் தற் போது 23 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் காணப்படுகின்றனர் என்றும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு, ஶ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் டெங்கு மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன இணைந்து அண்மையில் நடத்திய ஆய்வில், கட்டுமானப் பகுதிகளிலேயே டெங்கு நுளம்பு குடம்பிகள் அதிகளவில் உருவாக்கின்றன என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு நான்கு வகையான டெங்கு வைரஸ் வகைகள் தொற்றுகின்றன. அவற்றில் இரண்டாவது மற்றும் மூன்றாவது என அடையாளம் காணப்படுகின்ற வைரஸ் வகைகள் அதிகளவில் தொற்றுவதாக இனங்காணப்பட்டுள்ளது என்றும் விசேட மருத்துவ நிபுணர் லஹிரு கொடித்துவக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## மீகஹவத்தை கொலை சம்பவம்: மேலும் இரு பெண்கள் சிக்கினர்

கொழும்பு, நவ. 13

அங்கொடை, மீகஹவத்தைப் பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரு பெண்கள் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை, பந்தகிரிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தலைமறைவாகியிருந்த நிலையில் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் முன்னதாக சந்தேக நபர்கள் 5 பேர் கைதுசெய்யப்பட்டனர். தற்போது கைதுசெய்யப்பட்ட இருவரும் முல்லேரியா மற்றும் பொரளை ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கடந்த 26ஆம் திகதி காலை இடம்பெற்ற மேற்படி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 42 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியமை சி.சி.ரி.வி. காட்சிகளில் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர், அங்கொடை லொக்காவின் உதவியாளர் என்பதும், அவர் திட்டமிட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்தவர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்திருந்தது. (இ)



## சிவனொளிபாத மலைக்கான யாத்திரை டிசெம்பர் 18 ஆரம்பம்

இரத்தினபுரி, நவ. 13

புனித சிவனொளிபாத மலை யாத்திரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே சிவனொளிபாதமலை ஶ்ரீபாத ஸ்தான பிரதம குருவும் ஊவவெல்லஸ்ஸை பல்கலைக்கழக துணைவேந்தருமான பெங்கமுவ தம்மதித்த தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்மாதம் 16ஆம் திகதி சமய அனுஷ்டானங்களின் பின்னர் பெல்மதுளை கல்பொத்தாவலவிகாரையிலிருந்து புனித புத்தரின் சிலை மற்றும் பூஜைப் பொருட்களுடன் புறப்படும் பெரஹரா பலாங்கொடை அவிசாவளை குருவிட்ட பலாபத்தல் வழியாக சிவனொளிபாத மலை விகாரையை அடையும்.

அதன்பின்னர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் புனித ஸ்தலத்துக்கான யாத்திரை ஆரம்பித்து மே மாதம் வெசாக் போயா தினத்துடன் நிறைவுபெறும்.

இக்காலப்பகுதியில் யாத்திரிகர்கள், பக்தர்கள் ஆகியோர் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையைத் தவிர்த்து பாதுகாப்பு சுகாதார மற்றும் ஏற்பாட்டுக் குழுவினருக்கு உதவ வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ)

# ஆறு மாதங்களில் உலகம் முழுவதும் 8.4 கோடி பேர் போரால் இடம்பெயர்வு

## ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம்

நியூயோர்க், நவ. 13

உலகின் பல பகுதிகளில் இடம்பெறும் வன்முறை, உறுதியற்ற தன்மை மற்றும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் இந்த ஆண்டு முதல் 6 மாதங்களில் மட்டும் உலகளவில் கிட்டத்தட்ட 8 கோடியே 40 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர நிர்பந்திக்கப்பட்டனர் என்று ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு முதல் காலாண்டுக்கான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விபரங்களை ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் வெளியிட்டுள்ளது.



கடந்த டிசெம்பரில் இருந்து 8 கோடியே 24 இலட்சம் மக்கள் உலகம் முழுவதும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். பெரும்பாலும் உள்ளக இடப்பெயர்வுகள் இடம்பெற்றுள்ளன. தீவிர மோதல்களில் இருந்து தப்பும் நோக்கில் அதிகளவான மக்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். குறிப்பாக, ஆபிரிக்காவில் இந்தப் போக்கு அதிகரித்துள்ளது என்றும் கூறப்பட்டது.

கோவிட்-19 எல்லைக் கட்டுப்பாடுகள் பல இடங்களில் புகலிட கோரிக்கைகளை தொடர்ந்து கட்டுப்படுத்துகின்றன. வன்முறை, துன்புறுத்தல் மற்றும் மனித உரிமைகள் மீறல்களைத் தடுக்க சர்வதேச சமூகம் தவறி வருகிறது. இது அதிகளவானோர் இடம்பெயர முக்கிய காரணியாக உள்ளது என ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகர் பிலிப்போ கிராண்டி குறிப்பிட்டார்.

இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் உலகம் முழுவதும் வெடித்த மோதல்கள் மற்றும் வன்முறைகளால் கிட்டத்தட்ட 5 கோடியே 10 இலட்சம் மக்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குள் இடம்பெயர்ந்துள்ளனர். கொங்கோ ஜனநாயகக் குடியரசில் 13 இலட்சம் மக்களும் எதியோப்பியாவில் 12 இலட்சம் மக்களும் இந்த ஆண்டு முதல் ஆறு மாதங்களுக்குள் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை, மியன்மார் மற்றும் ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற உள்நாட்டு வன்முறைகளுக்கு அஞ்சி இடம்பெயர்வோர் எண்ணிக்கையும் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குத் தப்பியோடும் அகதிகளின் எண்ணிக்கையும் இந்த ஆண்டின் முதல் பாதியில் கிட்டத்தட்ட 2 கோடியே 10 இலட்சத்தை எட்டியது.

பெரும்பாலான புதிய அகதிகள் ஐந்து நாடுகளில் இருந்து வந்ததை ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் அவதானித்துள்ளது. (ஐ)



# அமெரிக்க பத்திரிகையாளருக்கு 11 ஆண்டுகள் சிறை தண்டனை!

## மியன்மார் இராணுவ அரசு விதித்தது

யங்கூன், நவ. 13

அமெரிக்க பத்திரிகையாளரான டேனி பென்ஸ்டருக்கு 11 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது மியன்மார் இராணுவ நீதிமன்றம்.

பென்ஸ்டர் குடியேற்ற சட்டத்தை மீறினார், சட்டவிரோத தொடர்பு மற்றும் இராணுவத்திற்கு எதிரான எதிர்ப்பை ஊக்குவித்தார் என்பவற்றின் அடிப்படையில் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் அமெரிக்க பத்திரிகையாளர்மீது தேசத் துரோகம், பயங்கரவாதம் ஆகிய குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டன. இவற்றுக்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள்மீதான விசாரணை எதிர்வரும் 16ஆம் திகதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

37 வயதான பென்ஸ்டர் பிராண்டியர் மியன்மார் என்ற இணையத்தின் நிர்வாக ஆசிரியராக இருந்தார். கடந்த மே மாதம் இவர் கைது செய்யப்பட்டார். பெப்ரவரி இராணுவ சதிப் புரட்சியின் பின்னர் கைதான பல ஊடகவியலாளர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கழிவறை நீரை குடிதண்ணீராக பயன்படுத்திய மருத்துவமனை!

## 30 ஆண்டின் பின்னர் வெளித்தெரிந்த உண்மை

ரோக்கியோ, நவ. 13

ஜப்பானில் மருத்துவமனை ஒன்றில் தவறுதலாக கழிவறை நீரை 30 ஆண்டுகளாக குடிதண்ணீராகப் பயன்படுத்தி வந்தமை தெரிய வந்துள்ளது.

யோமுயிரி ஷிம்புன் என்ற செய்தி நிறுவனம் ஒக்ரோபர் 20ஆம் திகதி வெளியிட்ட செய்தியில்,

ஒசாமா பல்கலைக்கழக மருத்துவமனையில், சில குடிதண்ணீர் குழாய்கள், கழிவறை குழாயுடன் தவறுதலாக இணைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது, குடிதண்ணீர் குழாய்களை இணைக்கும் பணியின்போது, அது தவறுதலாக, கழிவறையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் குழாய்களோடு இணைக்கப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தத் தவறால், கடந்த 30 ஆண்டுகளாக கழிவுநீரே குடிதண்ணீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 120 குழாய்களில் இவ்வாறு கழிவுநீர் குடிதண்ணீர் குழாய்க்கு பதிலாக இணைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் அமைக்க ஆய்வு செய்யப்பட்டபோதே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் தற்போது வேகமாகப் பரவி அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்கள் மருத்துவமனை நிர்வாகத்துக்கு தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர். இந்த செயலுக்கு மன்னிப்பு கேட்டுள்ள மருத்துவமனை நிர்வாகம். உடல்நல பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தால் சிகிச்சை அளிப்பதாகவும் உறுதியளித்துள்ளது. (ஐ)

# இந்தியாவில் கள்ள சாராயம் குடித்து 36 பேர் உயிரிழப்பு!

பீகார், நவ. 13

இந்தியாவின் பீகாரில் கள்ள சாராணம் குடித்து குறைந்தது 36 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு சம்பாரண், கோபால்கஞ்ச், சமஸ்திபூர் மற்றும் முசாபர்பூர் மாவட்டங்களிலேயே இந்த உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதையடுத்து, பீகார் பொலிஸ் துறை இதுவரை 800 க்கும் மேற்பட்ட சந்தேக நபர்களை கைது செய்துள்ளது.அதேநேரம் மாநிலம் முழுவதும் நடத்திய சோதனையில் 20 ஆயிரம் லீற்றர் கள்ளச் சாராயத்தை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இதனிடையே நவம்பர் 16 ஆம் திகதி மதுவிலக்கு குறித்து விரிவான ஆய்வு நடத்தப்படும் என்றும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பீகார் மாநில முதல்வர் நிதிஷ் குமார் முன்னதாக தெரிவித்திருந்தார். (ஐ)

# ‘கப்டன் அமெரிக்கா’ போராளிக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

## ஹொங்கொங் நீதிமன்று விதித்தது

ஹொங்கொங், நவ. 13


ஹொங்கொங்கில் இடம்பெற்ற போராட்டங்களில் சுப்பர் ஹீரோவின் கேடயத்தை பயன்படுத்தியமையால் கப்டன் அமெரிக்கா 2.0 என அழைக்கப்பட்ட ஜனநாயகப் போராளியான மா சுன்-மான் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவிடமிருந்து சுதந்திரத்தை ஊக்குவித்தார் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர், தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சீனாவிடம் இருந்து ஹொங்கொங் சுதந்திரத்தை ஊக்குவிக்கும் முழக்கங்களை எழுப்பியதன் மூலம் அவர் பிரிவினையை தூண்டினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு இடம்பெற்றது. அவர்மீது சீனா 2020ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்கு இடம்பெற்று, அவர் குற்றவாளியாக வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டார்.

தீர்ப்பின் பின்னர், மா ரொய்ட்டருக்குக் கருத்துத் தெரிவிக்கையில், ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்துக்கான எனது பாதையில் நான் ஒரு கோழையாக இருக்க முடியாது. எனக்கு எந்த வருத்தமும் இல்லை”, என்று தெரிவித்திருந்தார். (ஐ)





# 2049இல் வளர்ந்த, பணக்கார நாடாக சீனா மாற்றமடையும்!

## 3ஆம் முறையாக ஜின்பிங் பதவியேற்பார்

பீஜிங், நவ. 13

2021ஆம் ஆண்டில் மத்திய செல்வந்த நாடாக இருக்கும் சீனா 2049இல் முழுமையாக வளர்ச்சியடைந்த - பணக்கார நாடாக மாற்றமடையும் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி இலக்கு நிர்ணயித்துள்ளது.

அத்துடன், தற்போதைய ஜனாதிபதி ஜி ஜின்பிங் மூன்றாவது முறையாகவும் பதவியை தொடர அந்தக் கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கியுள்ளது.

சீனாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி 100 ஆண்டுகள் சிறப்பு வாய்ந்தது. இந்தக் கட்சியை உருவாக்கிய மாவோ சே துங் உருவாக்கிய அரசியல் யாப்பை அவரின் அரசியல் வாரிசான டெங் ஷியோப்பிங் 1981 இல் மாற்றியமைத்தார். அவரைத் தொடர்ந்து தற்போது ஜி ஜின்பிங் மாற்றியமைத்துள்ளார். இதன் மூலம் 100 ஆண்டு வரலாற்றில் மூன்றாவது மிகப்பெரிய தலைவராக அவர் மதிக்கப்படுகின்றார்.

கம்யூனிஸ்ட் மத்திய குழுவினர் 370 பேர் நான்கு தினங்கள் பீஜிங்கில் கூடி இந்த முடிவுகளை எடுத்தனர். இரகசிய கூட்டமாக நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன. எனினும், முக்கியமான இலக்குகள் மட்டுமே சீனா அரசாங்கத்தால் வெளியிடப்பட்டன.

மேலும், அடுத்த ஆண்டு ஜி ஜின்பிங் மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருவர் இரு தடவைகளே அல்லது 68 வயது வரையே ஜனாதிபதியாக பொறுப்பேற்க முடியும் என்ற அம்சத்தை கடந்த 2018ஆம் ஆண்டு ஜின்பிங் மாற்றியமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பிரிட்டன் தூதுவருடன் கூட்டமைப்பினர் பேச்சு

கொழும்பு, நவ. 13

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹில்டன் அம்மையாரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்னைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று சுமந்திரன் எம். பி. தெரிவித்தார்.

# பாணுக்குள் நத்தை!

## சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு

கொழும்பு, நவ. 13

வெதுப்பக உணவு உற்பத்திகளை விநியோகிக்கும் நடமாடும் ஓட்டோவில் விற்பனை செய்யப்பட்ட பாணுக்குள் நத்தை காணப்பட்ட சம்பவம் இங்கிரிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இந்தப் பாணை வாங்கிய நபர் இது குறித்து ஓட்டோவில் வந்த விற்பனையாளர் மற்றும் வெதுப்பக உரிமையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

எனினும், பாணுக்குள் நத்தை இருந்தமைக்குத் தாம் எதனையும் செய்ய முடியாது என அவர்கள் பதிலளித்துள்ளனர்.

இதையடுத்து பாணை வாங்கிய நபர், குறித்த சம்பவம் குறித்து இங்கிரிய சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ)

# ராஜா கொல்லுரே நீக்கப்பட்டமைக்கு எதிரான தடை உத்தரவு மேலும் நீடிப்பு

கொழும்பு, நவ. 13

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே நீக்கப்பட்டமையை இடை நிறுத்தும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவு நீடிக்கப் பட்டுள்ளது.

தவிசாளர் பதவியில் இருந்து தம்மை நீக்குவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயல்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராக ராஜா கொல்லுரே தாக்கல் செய் திருந்த மனு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இதன்போது, இந்த இடைக்காலத் தடை உத்தரவு எதிர்வரும் 23ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ)

# விவசாயத்தில் வடக்கு இளைஞர்கள் அக்கறை காட்டினால் உதவத் தயார்!

## அமைச்சர் மஹிந்தானந்த உறுதி



கொழும்பு, நவ. 13

**“விவசாயத்தில் ஈடுபடுவதற்கு வடக்கு இளைஞர்கள் அக்கறை காட்டினார்கள் என்றால், விவசாயத்துக்குத் தேவையான இடம் மற்றும் உதவிகளைச் செய்ய நான் தயாராக இருக்கின்றேன்.”**

- இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் சிலர், விவசாயத்துறை அமைச்சரை, அவரது அமைச்சில் சந்தித்த போதே, அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

“விவசாய ரீதியில் மிளகாய் உற்பத்தியில் ஈடுபட விருப்பமுள்ள வடக்கிலுள்ள இளைஞர், யுவதிகளுக்குத் தேவையான உதவிகளை என்னால் செய்துகொடுக்க முடியும்.

இவ்வாறு விவசாயத்தில் ஈடுபட ஆர்வமுடைய வடக்கு இளைஞர்களுக்காக அரை ஏக்கர் நிலத்தை வழங்கவும், அதற்குத் தேவையான உரம், நீர், கிருமிநாசினிகள் உள்ளிட்டவைகளை எமது அமைச்சு ஊடாகப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.

வடக்கு மாகாணத்தில் விவசாயத்துறையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் போது, புனர்வாழ்வளிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் தகுதிகளுக்கு ஏற்ப முன்னுரிமை அளிக்கவும் நடவடிக்கை எடுப்பேன்” - என்றார்.

விவசாயத்துறை அமைச்சருடனான குறித்த சந்திப்பின் போது, புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் எதிர்நோக்கும் பொருளாதார, சமூக, வாழ்வாதாரப் பிரச்னைகள் குறித்தும் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. (இ)

# ஐ.தே.க. பக்கம் தாவவுள்ளார் டயானா கமகே?

கொழும்பு, நவ. 13

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சங்கமிக்கவுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சபைக்கு வந்த டயானா கமகே, அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்ததால் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

இதையடுத்து ஆளுங்கட்சிக்குச் சார்பாக அவர் செயல்பட்டு வந்தார். இந்நிலையிலேயே தற்போது ஐ. தே. க. பக்கம் அவர் தாவவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)

# பருத்தித்துறையில் சிறுமி வன்புணர்வு; சந்தேகத்தில் இரு இளைஞர்கள் கைது!

வடமராட்சி, நவ. 13

பதின்ம வயது சிறுமி ஒருவரைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் தனித்து நின்ற 15 வயதுச் சிறுமியைப் பொலிஸார் தமது பொறுப்பின் கீழ் எடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சிறுமியிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே மேற்படி இரு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமி பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மேற்படி இரு இளைஞர்களால் இரு வேறு சந்தர்ப்பங்களில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 19 மற்றும் 24 வயதுகளையுடைய சந்தேகநபர்கள் இருவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (இ - 02)

# ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது அரசுக்கே பெரும் நன்மை!

## ஜே. வி. பி. எம். பி. விஜித ஹேரத் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 13

வேலையாட்களின் குறைந்த பட்ச ஓய்வுபெறும் வயதை 60 வயதாக அதிகரிப்பதன் மூலம் அவர்களின் மேலதிக 5 வருட ஊழியர் சேமலாப நிதியைத் தமது பொருளாதார தேவைக்குப் பயன்படுத்துவதே அரசின் திட்டம் என்று ஜே.வி.பியின் எம்.பி.யான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வேலையாட்களின் குறைந்த பட்ச ஓய்வுபெறும் வயதாக தற்போது 55 வயதுள்ள நிலையில் அரசு அதனை 60 வயதாக அதிகரித்து சட்ட திருத்தம் செய்துள்ளது.

இந்தத் திருத்தத்தால் ஊழியர்கள் சிறிதளவே நன்மை பெறுவர். ஆனால், அரசு பாரிய நன்மையடையவுள்ளது. வேலையாட்களின் குறைந்த பட்ச ஓய்வுபெறும் வயதை 60 ஆக்குவதன் மூலம் அவர்களின் மேலதிக 5 வருட ஊழியர் சேமலாப நிதியை தமது பொருளாதாரத் தேவைக்குப் பயன்படுத்துவதே அரசின் திட்டம். அதற்காகவே இந்த 5 வருட வயது அதிகரிப்பு.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு வாக்குறுதி அளித்த ஆயிரம் ரூபா சம்பளம் நீதிமன்ற நடவடிக்கையால் தடைப்பட்டிருக்கின்றது. அதனால் அடிப்படைச் சம்பள சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு ஆயிரம் ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுதொடர்பான வாக்குறுதியை வரவு - செலவுத் திட்டத்தில் அரசு வழங்கவேண்டும்

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கும்போது, அதனை அடிப்படைச் சம்பளமாக வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வருமாறு நாங்கள் அன்று தெரிவித்தோம். அவ்வாறு இடம் பெற்றிருந்தால் எந்த கம்பனிக்கும் அதனை நிராகரிக்க முடியாது. ஆயிரம் ரூபாய் வழங்கியே ஆகவேண்டும். ஆனால், அரசு திட்டமிட்டு செயற்பட்டு சம்பள நிர்வாகத்தில் திருத்தம் மேற்கொண்டது. அவ்வாறு செய்து சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளும்போது கம்பனிகளுக்கு நீதிமன்றம் சென்று அதனைச் சவாலுக்கு உட்படுத்த முடியும் எனவும் நாங்கள் அன்று தெரிவித்திருந்தோம்.



இன்று என்ன நடந்திருக்கின்றது. அரசு தெரிவித்த ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு தோட்டத் தொழிலாளர்களுக்குகிடைக்கின்றதா? குறைந்த பட்சம் அரசுக்குக் கீழ் இருக்கும் தோட்டங்களிலாவது இந்த ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதில்லை. நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணை இடம் பெறுவதால், வழக்கு முடியும் வரை ஆயிரம் ரூபாய் தோட்டத்தொழிலாளர்களுக்கு கிடைக்கப்போவதில்லை.

எனவே, அடுத்த வருடத்தில் இருந்தாவது தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் இருக்கும் அடிப்படைச் சம்பள சட்டத்தில் திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் யாருக்கும் நீதிமன்றம் சென்று அதனைச் சவாலுக்கு உட்படுத்த முடியாது. இந்த வரவு - செலவுத் திட்டத்திலாவது அது தொடர்பான பிரேரணையை அரசு முன்வைக்கவேண்டும்.

அதேபோன்று காப்புறுதித் துறையில் 45ஆயிரம் பேர் இருக்கின்றனர். இதுவரை இந்தத் துறையினர் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் இணைத்துக் கொள்ளப்பட வில்லை. இவர்களையும் ஈ.பி.எப்., ஈ.ரி.எப். கொடுப்பனவில் இணைத்துக் கொள்ள வேண்டும்” - என்றார். (இ)




# ராஜபக்ஷக்களின் வரலாற்று 'பட்ஜெட்'

## அமைச்சர் ரத்நாயக்க பெருமிதம்

கொழும்பு, நவ. 13

**"முழு உலகமே தொற்று நோயால் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள இவ்வேளையில், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்று, நிதி அமைச்சராகக் கடமையேற்று, தனது கடமையை பஸில் ராஜபக்ஷ நிறைவேற்றியுள்ளார். ராஜபக்ஷக்களின் வரலாற்று பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது."**

- இவ்வாறு வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நல்லாட்சி அரசு 2015ஆம் ஆண்டு நாட்டைக் கைப்பற்றி, 6 இலட்சம் கோடி ரூபாயைச் சீனாவிடமிருந்து கடனாகப் பெற்று, துறைமுகத்தைச் சீனாவுக்கு விற்று திறைசேறியில் இருந்த பணத்தை தன்னிச்சையாகக் கொள்ளையடித்தது. இதனால், நாடு பொருளாதார ரீதியில் இன்று சீரழிந்துவிட்டது. வெறுமையான திறைசேரியை நாம் பொறுப்பேற்றபோதுதான் இந்தப் பேரழிவு ஏற்பட்டது.



உயிரைப் பணயம் வைத்து, பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திரமுனை வரை அனைத்து ஆசிரியர்களையும் கொழும்புக்கு அழைத்து வந்து, மக்களின் உயிர்களை அடகு வைத்து அவர்களின் குணாதிசியங்களை உயர்த்திக் காட்ட எடுத்த நடவடிக்கையை அனைவரும் பார்த்திருப்பார்கள். இதுதான் ஜோசப் ஸ்டாலினின் விருப்பம். எனவே, இதற்கு இனி மேலும் ஏமாற வேண்டாம்.

இந்தப் பிரச்னைகளை இந்தப் பூமியில் உண்மையான மக்கள் அன்பைப் பெற்ற தொழிலாளர் தலைவரால் மாத்திரமே தீர்க்க முடிந்தது. மஹிந்த ராஜபக்ஷவே எப்போதும் போராட்டங்களுக்குத் தீர்வை வழங்கியுள்ளார். எனவே, இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் வரவு - செலவுத்திட்டம் ஊடாக இந்தப் பிரச்னையைத் தீர்க்க பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்வைத்துள்ள வரவு - செலவுத்திட்டம் மக்கள் வரவு - செலவுத்திட்டமாக அமைந்துள்ளது" - என்றார். (இ)

# மட்டக்களப்பில் கூட்டமைப்பு வசமுள்ள இரு சபைகளின் 'பட்ஜெட்' நிறைவேற்றம்

மட்டக்களப்பு, நவ. 13

மட்டக்களப்பு, மண்முனை தென்எருவில்பற்றுப் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் சபை உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில் நடைபெற்றசபை அமர்வின் போது பாதீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் சபை உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சபையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சபை என்பது குறிப்பிடத்தக்கது.



அதேநேரம், மட்டக்களப்பு, ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டமும் அனைத்து உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள சபையாகும்.

தவிசாளர் எஸ்.சர்வானந்தத்தால் பாதீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த வேளையிலேயே சபையில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. (இ)

# மலையக மக்களுக்கும் உரிமைகள் கிடைக்க வேண்டும்!

## வடிவேல் சுரேஷ் எம்.பி. வலியுறுத்து

பதுளை, நவ. 13

'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்றால் மலையக மக்களுக்கும் உரிமைகள் கிடைக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தினார்.

தொழில் சட்டத்தை மீறி, தொழில் அமைச்சுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அளவுக்கு பெருந்தோட்ட கம்பனிகளுக்கு இந்தளவுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? எனவும், இதன் பின்புலம் என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"இன்றைய காலகட்டத்தில் பெருந்தோட்ட மலையக மக்கள் வஞ்சிக்கப்பட்டு, துன்பம் இழைக்கப்பட்டு, மனித உரிமைகள் மீறப்பட்டு, இந்த நாட்டின் தொழிற் சட்டங்கள் அனைத்தையும் மீறி பெருந்தோட்ட கம்பனிகளால் நடத்தப்படுகின்றனர்.

பெருந்தோட்ட கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களை வஞ்சிப்பதைத் தடுக்க உரிய வேலைத் திட்டம் ஒன்றை தொழில் அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்றால் மலையக மக்களுக்கும் உரிமைகள் கிடைக்க வேண்டும். மலையக மக்களுக்கு மாத்திரம் மனித உரிமைகளை மீறி வஞ்சிக்கப்பட்டு, பெண் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் முழுமையாக சீரழிக்கப்பட்டுக்கொண்டு இருப்பதன் நோக்கம் என்ன?

தொழிற்சட்டத்தை மீறி, தொழில் அமைச்சுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அளவுக்குப் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு இந்தளவுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? இதன் பின்புலம் என்ன? இந்த கேள்விக்குப் பதில் தெரியவேண்டும்.

மலையக மக்களின் வாக்கு அரசுக்கு வேண்டும் என்றால் அவர்களின் வாழ்க்கையை ஏன் கம்பனிகளிடம் ஒப்படைக்கின்றீர்கள்?" - என்றார். (இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 05 - 1943



இறப்பு 10 - 11 - 2021

## பாலசிங்கம் தங்கவேல்

*(பிரபல புகையிலை மொத்த விற்பனையாளர்)*

( T.N.G Brothers Colombo)

வேலணை சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் தங்கவேல் அவர்கள் 10.11.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பாலசிங்கம் - நகுலாம்பிகை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற நடராஜா, பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும்,சொர்ணகாந்தி(தேவி) அவர்களின் பாசமிகு கணவரும், துஷ்யந்தி(ஜேர்மனி), முரளிதரன்(கொழும்பு), சதுர்ஷன்(சுவிஸ்), அசோகன், கிரிவேந்தன்(கொழும்பு), ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அசோகவர்த்தன்(ஜேர்மனி), தர்ஷிகா(கொழும்பு), சுமணலதா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஞ்சலாதேவி(பிரான்ஸ்), நாகநாதபிள்ளை(இணுவில்), காலஞ்சென்ற ஞானவேல் மற்றும் புஸ்பலீலா (சுவிஸ்), தற்பரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர்- கொழும்பு விவேகானந்தா கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,அபிராமி(ஜேர்மனி), சூர்யா(ஜேர்மனி), விஸ்ணு(ஜேர்மனி), தரணிகா(கொழும்பு), கீர்த்திகா(சுவிஸ்), ஹரித்(சுவிஸ்), மனோஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும்,காலஞ்சென்ற ரவீந்திரன், சிவகாமசுந்தரி (இணுவில்), கேதாரகௌரி(கொழும்பு), சௌந்தரராஜா(சுவிஸ்), தர்மராஜா(கொழும்பு), காலஞ்சென்ற கந்தசாமி, சிவகுருநாதன், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் கேதாரநாதன் ஆகியோரின் மைத்துனரும்,காலஞ்சென்ற ஆசரத்தினம், சோதிமணி தம்பதிகள், சிறிசிதம்பரநாதன் வசந்தினி தம்பதிகள், சௌந்தரராஜா புஸ்பலீலா தம்பதிகள் ஆகியோரின் சம்மந்தியும், சறோஜினிதேவி, இந்திராணி, அருமைநாயகம், இந்திராணி ஆகியோரின் சகலரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை 14-11-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 09:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப 11:00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**சொர்ணகாந்தி (தேவி-மனைவி)** Mobile : +94212229175
**முரளிதரன் (மகன்)** Mobile : +94777600444
**துஷ்யந்தி (மகள்)** Mobile : +41779758580
**சதுர்ஷன் (மகன்)** Mobile : +41763860584
**சுமணலதா(மருமகள்)** Mobile : +41788189226

*இல. 539, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## பசுமை...

இதன்படி, மானியங்கள் உட்பட நாட்டின் மொத்த வருமானம் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 400 கோடி ரூபாயாகும். மொத்த செலவினம் 3 இலட்சத்து 91 ஆயிரத்து 200 கோடி ரூபாயாக உள்ளது. இதில், மீண்டு வரும் செலவினம் 2 இலட்சத்து 99 ஆயிரத்து 600 கோடி ரூபாயாகும்.

தேசிய வருமான மட்டத்தில் தற்போது 10 வீதமாகக் காணப்படும் வரவு - செலவு திட்ட பற்றாக்குறை 2027ஆம் ஆண்டுக்குள் 1.5 வீதமாகக் குறைப்பதே நோக்கம் என்றும் நிதியமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

ஆசிரியர் தொழில் சங்கங்களின் கோரிக்கைகள், உரத் தட்டுப்பாடு மற்றும் தொற்று நோயால் கடுமையாப் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு நிவாரணம் வழங்கும் விதமாக வரவு - செலவுத் திட்டத்தில் இடமளிக்கப்பட்டிருந்தது.

பாரம்பரியமற்ற வரவு - செலவு திட்டம் என்று கூறப்பட்ட இந்த வரவு செலவு திட்டத்தில் ஆசிரியர்கள் - அதிபர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்தல் மற்றும் சம்பள அதிகரிப்புக்காக 3 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்க முன்மொழியப்பட்டது. இது ஏற்கனவே ஒதுக்கீடு செய்ப்பட்ட 10 ஆயிரத்து 900 கோடி ரூபாய்க்கு மேலதிமானது என்று நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

பணப்பற்றாக்குறைக்கு மத்தியிலும் கமசமக பிலிசந்தர திட்டத்தின் நீட்சியாக ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

நாட்டில் பால் நுகர்வை ஊக்குவிப்பதற்கான புதிய திட்டத்துக்கு 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதன் மூலம் நாட்டில் பால் பவுடர் மூலம் அந்நிய செலாவணி வெளியேறாமல் தடுக்கப்படும்.

குடும்ப பொருளாதாரம், உணவு பாதுகாப்புக்கு 3,100 கோடி ரூபாய், சிறை கைதிகளின் மேம்பாட்டுக்கு 20 கோடி ரூபாய், கர்ப்பவதி தாய்மாரின் நிவாரணப் பொதி திட்டம் 2 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ள. அத்துடன் முடக்க காலத்தில் தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்களுக்க நிவாரணம் அளிக்க பாடசாலை வான் உரிமையாளர்களுக்கு ரூ. 40 கோடி, பஸ் உரிமையாளர்களுக்கு 150 கோடி, முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விபத்துக்களை தடுப்பதற்கு விபத்துக்களை ஏற்படுத்தும் சாரதிகளிடம் இருந்து கட்டணம் அறவிடும் முறைமை அறிமுகமாகும். காப்புறுதி மூலம் இந்தப் பணத்தை வசூலிக்க இடமளிக்கப்படும்.

அரச ஊழியர்களிடையே சம்பள முரண்பாட்டை தவிர்க்க புதிய கட்டமைப்பு நிறுவப்படும்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் ஏற்பட்ட 850 கோடி ரூபாய் இழப்பு மீண்டும் திறைசேரிக்கு அளிக்கப்படுகின்றது.

வணிக நிறுவனங்களை ஆரம்பிப்பதற்காக பதிவு கட்டணம் தள்ளுபடி, நகர்புற வீடமைப்புக்கு 200 கோடி ருபாய் ஒதுக்கீடு, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 2000 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளன.

தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கான உரிமங்கள் பொது ஏலத்தின் மூலம் வழங்கப்படும். இது வெளிப்படைத் தன்மைக்கு வழி வகுக்கும் என்றும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார். மேலும், இந்த வரவு - செலவு திட்டத்தில் பசுமை பொருளாதாரத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சேதனப் பசளைகள், கிருமிநாசினிகளை பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிகரெட்டின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கும். வங்கிகள் காப்பீடு நிறுவனங்கள் செலுத்த வேண்டிய மதிப்பு கூட்டு வரி 15 வீதத்திலிருந்து 18 வீதமாக உயர்த்தப்படும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 10 ஆண்டுகளின் பின்னரே ஓய்வூதியம் எனப் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

மேலும், அனைத்து மாவட்டங்களும் விவசாய உற்பத்தி வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

**தனிடல், மீன்பிடி வலயமாக யாழ்ப்பாணம்**

இதன்போது அடையாளம் காணப்பட்ட ஒவ்வோர் உற்பத்தித்துறைக்கும் அமைவாக ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உற்பத்தி முதலீட்டு வலயங்களாக சேதனப் பசளை உற்பத்திக்காக - விவசாய மாவட்டங்கள் அனைத்தும் உள்வாங்கப்பட்டுள்ளன. ஆடைக் கைத்தொழில்களுக்கு தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வலயமாக கிளிநொச்சியும், ஏற்றுமதி, விவசாய பதனிடல் வலயமாக யாழ்ப்பாணமும், மீன்பிடி மற்றும் நீர்வாழ் உற்பத்தி வலயமாக யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களும், இரசாயன பொருள் உற்பத்தி வலயங்களாக பரந்தன், புல்மோட்டை பகுதிகளும் இனங்காணப்பட்டுள்ளன என்றும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

(வரவு - செலவு திட்ட முழுவிவரம் பக்கம் 7 இல்)

## கடற்பிராந்தி...

யுள்ளது.

கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் இது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடிய சாத்தியம் நிலவுகின்றது.

அத்துடன் வடமத்திய மாகாணத்தில் அதிகரித்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

இதுதவிர ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

நாடு முழுவதும் மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்தகாற்று வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (அ)

## மக்களுக்கு...

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்றை நடத்தியது.

கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன, பொதுச் செயலாளர் ரஞ்சித் பண்டார, தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க, முன்னாள் அமைச்சர் சாகல ரட்ணாயக்க, முன்னாள் எம்.பி சமன் ரத்னப்பிரிய மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

அத்தியாவசியப் பொருட்கள் முதல் நாட்டு மக்களின் சாதாரண வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் அனைத்து காரணிகளும் அதிகிரித்துள்ளமைக்கு கண்டனம் வெளியிடப்பட்டதுடன், மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென இதன்போது வலியுறுத்தப்பட்டது.

## பஸிலின் பட்ஜெட்...

கூறியவை வருமாறு,

வரவு- செலவுத் திட்டம் ஊடாக நிவாரணங்கள் கிடைக்கும், நன்மைகள் பயக்கும் என்றே மக்கள் எதிர்ப்பார்த்தனர். ஆனால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள்கூட குறைக்கப்படவில்லை. அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. பெருந்தோட்ட மக்களுக்கு சலுகைகள் இல்லை.

மாற்றம் வரும் என நாம் நினைத்தோம். பயனற்ற பாதீடே முன்வைக்கப்பட்டுள்ளது. பாட்டி வடை சுட்ட கதைபோல, உரையை கேட்டுக்கொண்டிருந்தோம். மிகவும் மோசமான இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியாது-என்றார்.

### வீதிப் புனரமைப்பின்போது

# வலி. மேற்கு பிரதேசத்தில் உள்ள மதகுகளை புனரமைக்க வேண்டும்!

### வட மாகாண ஆளுநருக்கு கடிதம்

யாழ். - மானிப்பாய் - பொன்னாலை வீதிப் புனரமைப்பின்போது வலி.மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாலங்கள் மற்றும் மதகுகளை சீராக புனரமைப்பதை உறுதிப்படுத்துமாறு வலி.மேற்கு பிரதேச சபை வடக்கு மாகாண ஆளுநரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் வலி.மேற்கு பிரதேச சபை கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி வீதி புனரமைப்பின்போது மானிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையே பெரியதும் சிறியதுமாக ஆறு வரையான மதகுகள் புனரமைக்கப்படாமல் காபெற் இடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த மதகுகள் அடுத்துவரும் சில ஆண்டுகளிலேயே இடிந்து விழும் அபாயம் காணப்படுவதால் அவற்றைப் புனரமைக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த வீதிப் புனரமைப்பின்போது வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து மதகுகளும் புனரமைக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு சபை உறுப்பினர் ந.பொன்ராசா பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரைக் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இதையடுத்தே, வலி.மேற்கு பிரதேச சபை வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்டவர்களுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

(3)

# நாள்தோறும் எகிறும் தொற்று நேற்று 723 பேர் அடையாளம்

கொழும்பு, நவ. 13

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 723 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 48 ஆயிரத்து 784 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 333 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 23 ஆயிரத்து 122 ஆக உயர்வடைந்துள்ளது.

## அனுமதியற்ற கூட்டங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, நவ 13

பொதுக்கூட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கு அனுமதி பெறப்படாவிட்டால் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்து வர் அசேல குணவர்தன தெரி வித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கைக்கு இன்னும் வரம்பு விதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

எந்தவொரு விதிமீறலுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் கூட்டங்களுக்கு அனுமதியில்லை என பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## கொரோனாவால்...

உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,950 ஆக அதிகரித்துள்ளது.

## நிவாரணமற்ற...

டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் தனது டுவிட்டர் கணக்கில் செய்துள்ள பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மக்களின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றமாக்கியுள்ளது.

நிதி மற்றும் கொடுப்பனவுகளின் இருப்பு பற்றாக்குறையின் முக்கிய கட்டமைப்பு பிரச்னைகளைத் தீர்க்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்த தீர்வும் வழங்கப்படவில்லை.

முதலீடுகள், ஏற்றுமதிகள், தொழில்நுட்பம் மற்றும் கண்டுப்பிடிப்புகளில் புதிய திட்டங்கள் எதுவும் இல்லை-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## அரச துறைகளில்...

“அரச நிறுவனங்களில் தொலைபேசி வசதிகளை 25 சதவீதத்தால் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் சூரிய சக்தியில் அதிக கவனம் செலுத்துவதற்கான முன்மொழியப்படுகிறது.

சமுர்த்தி வங்கி மறுசீரமைக்கப்படும். வங்கிக்கு தேவையான அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் வழங்க ‘ஒன் ஸ்டாப் ஷாப்’ கான்செப்ட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது” என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார். (அ)

## காணாமல்போன...

டுள்ளது. அந்த நிதிக்கு மேலதிகமாகவே இந்த 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2015 -2019 காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு, நிவாரணம் வழங்க மேலதிகமாக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டார்.

## அலாவுதீனின்...

வளர்ச்சியை அதிகரிப்பதற்கான திட்டங்களும் இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பட்ஜெட் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் சிலர் தெரிவிக்கையில்-

பஸிலுக்கு ஏழு மூளைகள், அலாவுதீனின் அற்புத விளக்கு போல் பட்ஜெட் அமையும் என ஆளுங்கட்சியினர் கூளுரைத்தனர். ஆனால் இன்று மக்கள் நல திட்டங்களை புறக்கணித்தும், வரி சுமையை அதிகரிக்கும் விதத்திலும் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பயனற்ற பட்ஜெட்.” - என்றனர்.

ஈழநாடு
Eelanadu

உலகக் கிண்ண இறுதியாட்டம்

# நியூசிலாந்தின் கொன்வே அணியிலிருந்து விலகல்!

டுபாய், நவ. 13

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இருபது -20 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் நியூசிலாந்து விக்கெட் காப்பாளர் டெவன் கொன்வே விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தியாவுக்கு எதிரான தொடரிலும் அவர் விளையாடமாட்டார் என நியூசிலாந்து அணி முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிராக புதன்கிழமை நடைபெற்ற இருபது - 20 உலகக் கிண்ண முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்தின் வெற்றியில் முக்கிய பங்களாற்றியவர்களில் ஒருவரான டெவன் கொன்வே கையில் சுண்டு விரல் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது.

வியாழனன்று நடத்தப்பட்ட எக்ஸ் ரே பரிசோதனையில் இது உறுதிசெய்யப்பட்டது. இப்போதைக்கு அவர் தொடர்ந்து விளையாடமாட்டார் என தலைமைப்



பயிற்றுநர் கெறி ஸ்டெட் தெரிவித்தார்.

"நியூசிலாந்து அணிக்காக விளையாடுவதை மேலானது என டெவன் கொன்வே கருதுகின்றார். எனினும் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் தொடர்ந்து விளையாட முடியாமல் போனதையிட்டு மிகவும் வேதனையும் ஏமாற்றமும் அடைந்துள்ளார்.

எனவே, அவருக்கு ஆறுதலளிக்க நாங்கள் அனைவரும் முயற்சித்து வருகின்றோம்" என கெறி ஸ்டெட் கூறினார். இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 46 ஓட்டங்களைப் பெற்ற டெவன் கொன்வே, ஆட்டநாயகன் டெரில் மிற்செல்லுடன் 3ஆவது விக்கெட்டில் 82 ஓட்டங்களைப் பகிர்ந்து நியூசிலாந்தின் வெற்றியில் பங்காற்றியிருந்தார்.

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் இந்திய அணி அறிவிக்கப்பட்டது



புதுடில்லி, நவ. 13

நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட், 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் இந்திய அணி விளையாடவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி தொடங்கி 21ஆம் திகதி வரை இருபது - 20 தொடர் நடக்கவுள்ளது. டெஸ்ட் தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதற்காக இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா தலைமையிலான அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இருபது - 20 தொடரில், கோலி, ஜடேஜா, பும்ரா, ஷமி ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. உலகக் கோப்பை அணியில் இடம்பெற்ற பாண்ட்யா, வருண் சக்ரவர்த்தி, ராகுல் சஹார், ஷர்துல் தாகூர் ஆகியோர் இடம்பெறவில்லை.

இந்நிலையில் டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் டெஸ்டில் விராட் கோலி விளையாடாததால் ரஹானே தலைமையில் இந்திய அணி களமிறங்கவுள்ளது. 2ஆவது டெஸ்டில் விராட் கோலி அணியினருடன் இணைந்து தலைவராக அணியை வழிநடத்துவார்.

ரோஹித் சர்மா, ரிஷப் பந்த், பும்ரா, ஷமி ஆகியோர் டெஸ்ட் தொடரில் பங்கேற்கவில்லை. புஜாரா உப தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணி விவரம் - ரஹானே, கே.எல். ராகுல், மயங்க் அகர்வால், புஜாரா, /ப்மன் கில், ஷ்ரேயஸ் ஐயர், சஹா, கே. எஸ். பரத், ஜடேஜா, ஆர். அஸ்வின், அக்ஷர் பட்டேல், ஜெயந்த் யாதவ், இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், சிராஜ், பிரசித் கிருஷ்ணா, விராட் கோலி.

# மத்தியூஸ் உள்ளிட்ட 10 வீரர்களை எல். பி. எல்லில் சேர்க்க பரிந்துரை



கொழும்பு, நவ. 13

லங்கா பிறீமியர் லீக் இருபது 20 கிரிக்கெட்டில் உரிமைத்துவ அணிகளினால் தெரிவு செய்யப்படாமல் இருந்த சில தேசிய வீரர்கள் உட்பட 10 வீரர்களை இணைத்துக் கொள்வதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பரிந்துரை செய்துள்ளது.

அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், குசல் ஜனித் பெரேரா, தனஞ்சய டி சில்வா, அகில தனஞ்சய, பிரவீன் ஜெயவிக்ரம, மினோத் பானுக, சதீர சமரவிக்ரம, அஷான் ப்ரியஞ்சன், ஷிரான் பெர்னாண்டோ ஆகிய வீரர்களையே ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பரிந்துரை செய்துள்ளது.

இந்த 10 வீரர்களில் தலா இருவரை உரிமைத்துவ அணிகள் தெரிவு செய்து கொள்ளலாம் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக உரிமைத்துவ அணிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டு விரைவில் தீர்மானிக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK



11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- பஞ்சதந்திரம்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-தற்கால பொருளாதாரா நிலைக்கு காரணம்?



**இரவு**
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
7.30 மணி: மனிதனின் மறுபக்கம்- கல்பனா ஷாவ்லா



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு